தேனருவி வெளியீடு—7.

# பரிசில் வாழ்க்கை

ஆசிரியர் :

வித்துவான் இராம. பெரியகருப்பன்,

தமிழாசிரியர், மீனாட்சி சுந்தரேஸ்வரர் உயர்நிலைப்பள்ளி,

காரைக்குடி.

UNIVERSITY EXTENSION LIBRARY
29 SEP 195
MADURAI

தேனருவிப் பதிப்பகம்

தியாகராயநகரம் :: சென்னை—17.

உரிமை : பதிப்பகத்தார்க்கே

முதற் பதிப்பு : அக்டோபர், 1956
26 பவுண்டு வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

*Published by :*

THENARUVI PATHIPPAKAM
TYAGARAYANAGAR :: MADRAS—17.

மாருதி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை—14.

# பதிப்புரை

பழந்தமிழ் நாட்டின் பரிசில் பெறுவோர் வழங்குவோர் பற்றிய, சுவையான தமிழ் நூல், இந்நூல். பல ஆண்டுகளாக, ஆய்ந்து, பல குறிப்புக்களைச் சேகரித்து இந்நூலை ஆக்கியுள்ளார், இதன் ஆசிரியர். அவர்க்கு எங்கள் நன்றி. தமிழகம் ஏற்று, பயனெய்தி, எம்மை ஊக்குவிக்கும் என்பது எங்கள் நம்பிக்கை.

பதிப்பகத்தார்.

MADURAI

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | நாம் பிறந்த நாடு | ... | 5 |
| 2. | பரிசில் வாழ்க்கை | ... | 16 |
| 3. | அமைச்சரின் அறிவுரை | ... | 27 |
| 4. | தூதரின் தொண்டு | ... | 37 |
| 5. | நண்பரின் பண்பு | ... | 44 |
| 6. | சிந்தனைத் திறம் | ... | 65 |
| 7. | அருள் உள்ளம் | ... | 71 |
| 8. | பெருமித வாழ்வு | ... | 76 |
| 9. | அரசர்கள் ஆதரவு | ... | 83 |
| 10. | முடிவுரை | ... | 89 |

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# 1. நாம் பிறந்த நாடு

முத்து விளையும் நாடு; முப்புறமும் கடல் சூழ்ந்த நாடு; முத்தமிழ் வளரும் நாடு—நாம் பிறந்த கன்னித் தமிழ் நாடு. வரலாற்றுக் காலத்துக்கு முந்திய பழைமையும், உலக மக்கள் அனைவரினும் சிறந்த நாகரிகமும், பிற இனத்தார் எவரினும் மேம்பட்ட பண்பாடும், பிற மொழி எதற்கும் உயர்ந்த இலக்கியமும் பெற்ற நாடு இத் தமிழ்நாடு. இந்நாட்டில் பிறக்கும் பேறு பெற்ற தமிழர்கள் ஈடற்ற பெருமைக்கு உரியவர்கள்; அதே நேரத்தில் அப் பெருமையைச் சிறிதும் குறையாமல் காப்பாற்றும் கடமையும் உடையவர்கள். அக் கடமையாற்றும் வழிதான் யாது? இதுவே இன்றுள்ள தமிழ் இளைஞர்களின் முன்னுள்ள தலையாய கேள்வியாகும். நம் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டுமானால் நம் நிலைமை, தகுதி, வரலாறு இவற்றை நாம்

ஆராய்ந்தறிய வேண்டும். ‘தன்னைத் தலைசிறந்தவனாக ஆக்கிக்கொள்வதும், இழிந்தவனாக ஆக்கிக் கொள்வதும்,” அவனவன் உள்ளப் பாங்கையும் செயலையும் பொறுத்திருக்கிறது. இது கருதியே “தீதும் நன்றும் பிறர்தர வாரா,” என்றனர் நம் முன்னோர். ஆம், ஒருவனுக்குத் தீமையும் நன்மையும் பிறரால் உண்டாவதில்லை; அவன் செயலே அதற்குக் காரணம். எனவே, தமிழர்கள் தங்கள் பெருமையைக் காக்க வேண்டுமாயின், அவர்கள் வரலாற்று உணர்வுடையவர்களாக வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியே வரலாற்று உணர்வைத் தருவதாகும்.

**நமது நாகரிகம்**

உலக நாகரிகங்கட்கும் தமிழர் நாகரிகத்திற்கும் ஒரு குறிப்பான வேறுபாடு உண்டு. பிற நாகரிகங்கள் பெரும்பாலும் புறநாகரிகங்களே; அவற்றுள் அக நாகரிகம் அல்லது பண்பாடு சிறுபான்மையே. தமிழர் நாகரிகமோ பெரும்பகுதி அகநாகரிகத்தையே சார்ந்தது. இதனால்தான் தமிழர்தம் நாகரிகத்தை விளக்கும் புற உலகச் சின்னங்கள் மிகக் குறைவாகவும், அகநாகரிக விளக்கமான இலக்கியங்கள் அதிகமாகவும் உள்ளன. இவ் விலக்கியங்களை நமக்குப் படைத்துத் தந்தவர்கள் புலவர் பெருமக்கள். நமது மன்னர்கள் இமயம்வரை படையெடுத்துச் சென்றார்கள்; வடபுலம் அனைத்தையும் வென்று அடிப்படுத்தி ஆண்டார்கள்; நமது நாகரிகத்தை உலகெங்கும் பரப்பினார்கள்! கடல் கடந்து கடாரத்தை வென்றார்கள்; இன்றைய ஜாவா, சுமத்திரா அனைய

கிழக்கிந்தியத் தீவுகளிலும் இலங்கையிலும் தங்கள் ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்தினார்கள். யவனரும் சீனரும் நம் பழந் தமிழகத்துடன் நாகரிகத் தொடர்பு உடையவர்களாகத் திகழ்ந்தார்கள். கடல் வாணிகம் தரை வாணிகம், தொழிற் சிறப்பு, கலைநுணுக்கம், கல்வி வளர்ச்சி அனைத்தும் படைத்துத் திகழ்ந்தார்கள் தமிழர்கள். இத்துணைச் சிறப்பையும் இன்று நமக்கு எடுத்துக் காட்டும் கருவிகள் யாவை ? உலகினர்க்கு நாம் இதனை மெய்ப்பிக்கக் காட்டும் சான்றுகள் யாவை ? சுருக்கமாகக் கூறின் புறச்சான்றுகள், புறக்கருவிகள் நமக்குக் குறைவு. எடுத்துக் காட்டாக அசோகனது ஆட்சிப் பரப்பை, அவன் தன் அருட்கருத்துக்களைப் பொறித்து வைத்த கல்வெட்டுக்களாலும் கற்றூண் களாலும் இன்றும் நாம் அறிகிறோம். ஆனால், நெடுஞ் சேரலாதன், ' இமயவரம்பன் ' எனச் சிறப்புற்றதற்கும், கரிகாற் பெருவளத்தான் இமயத்தில் புலி இலச்சினை யைப் பொறித்ததற்கும், சேரன் செங்குட்டுவன் கண் ணகித்தெய்வத்திற்கு இமயத்திற் கல்லெடுத்துக் கனக விசயர் தலைமீது ஏற்றிவந்ததற்கும் நாம் இன்று காட்டக் கூடிய புறச்சான்றுகள் ஏதும் இல. சோழர் குன்றுகள் **(Chola Range)** எனப் பெயர் குறிக்கத்தகும் இமய மலைத் தொடர்களின் சிலவற்றின் பெயர் ஒன்றே இன்று எஞ்சி நிற்கின்றது. இவ்வாறே தமிழக வரலாறும் நாகரிகமும் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டே பெரும்பான்மையும் திகழ்கின்றது. வரலாற்றுச் சான்றுகள் அனைத்திலும் இலக்கியச் சான்றுகளையே மேனாட்டு வரலாற்றுப் பேராசிரியர்கள் முதன்மைப் படுத்தியுள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ப் புலவர்கள்

பழந் தமிழகத்தைத் திரும்பிப் பார்க்கும் நாம் தமிழ்ப் புலவர்க்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம். பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண்கீழ்க் கணக்குமாகிய சங்க இலக்கியமும், அவற்றிற்கு முந்திய தொல்காப்பியமும், பிற்பட்ட ஐம்பெருங் காப்பியங்களும் நமது முற்கால இலக்கியங்களாகும். இதிகாசங்களும் புராணங்களும், ஆழ்வார்கள் நாயன்மார்கள் பாடல்களும் பிறசமய நூல்களும், சிறு நூல் வகைகளும் அனைய பல இடைக்காலத்தனவாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி தொடங்கி இன்றளவும் வளர்ந்துள்ள—வளர்ந்துவருகின்ற—இலக்கியங்கள் இக்கால மறுமலர்ச்சி இலக்கியங்களாகும். இவையனைத்தையும் உருவாக்கியவர்கள் தமிழ்ப் புலவர்கள். காலவெள்ளத்திலே நமது நாகரிகம் அழிந்து போகாமல் காப்பாற்றியவர்கள் அவர்கள். செல்வத்தில் திளைத்தபோது இறுமாந்து அவர்கள் தமிழை மறந்ததும் இல்லை; வறுமையில் வாடியபோது மனந்தளர்ந்து அவர்கள் தமிழை மறந்ததுமில்லை. அவர்களிலே பலர் தமிழால் வாழ்ந்திருக்கிறார்கள்; தமிழால் சிறப்படைந்திருக்கிறார்கள். அதுபோலவே அவர்கள் தமிழுக்காகத் தங்கள் உயிரையும் கொடுத்திருக்கிறார்கள்; பிறர் கூறும் இழிவுரைகளைப் பொறுத்திருக்கிறார்கள். அவர்களால் தமிழ் வளர்ந்தது; தமிழ் இலக்கியம் சிறப்புற்றது. தமிழால், தமிழ் இலக்கியத்தால் அவர்களும் இன்றளவும் நம்முடன் வாழ்கின்றார்கள், இனியும் வாழ்வார்கள்!

**சங்க காலம்**

நமது இலக்கியத்தின் தலையாய பொற்காலம் சங்க காலமேயாகும். அன்று, தமிழ்ப் புலவர்கள் சுதந்திரமாகச் சிந்தனை செய்யும் உரிமையுடனும், தாங்கள் சிந்தித்த வற்றை எவர்க்கும் அஞ்சாது எடுத்துரைக்கும் ஆற்ற லுடனும், முடியுடை அரசர்களும் தங்கள் அறிவுரையை நாடி, ஏற்று, நடக்கும்படியான அறிவுவன்மையுடனும் வாழ்ந்தார்கள். இதனால் மேனாட்டார் போற்றும் தொன்மைமிக்க கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர்களிலே வெவ்வேறு துறைச் சிந்தனையாளர்கள் **(Schools of Thoughts)** இருந்தது போலவே தமிகத்தும் அத் தொன்மைமிக்க சங்க காலத்திலேயே பல்வேறு துறை வழிப்பட்ட சிந்தனையாளர்கள், அறிஞர்கள் வாழ்ந்திருக் கிறார்கள். சிலர் அகத்துறை வல்லவர்களாகவும், சிலர் புறத்துறை வல்லவர்களாகவும் திகழ்ந்திருக்கிறார்கள். உலகியல் விளக்கம், இறையியல் சிறப்பு, அறவியல் ஒருமை அனையபலவற்றை உருவாக்கி வளர்த்த சிந்தனை யாளர்களையும் தமிழகத்திற் காண்கிறோம். தொழிற் பயிற்சி, கலைவன்மை இவற்றை உருவாக்கி அவர்கள் தமிழகத்தைச். செல்வமும் இன்பமும் கொழிக்கும் நாடாகச் செய்தார்கள். இன்றைய தமிழகத்திற்குப் பெரிதும் வழிகாட்டிகளாகத் திகழ்பவர்கள் இப் பழம் புலவர்களே எனலாம்.

பழம் புலவர்களிலே பலர் பல்வேறு தொழில் களிலும் கலைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள். மருத்துவன் தாமோதரனர் என்ற புலவர் தலைசிறந்த மருத்துவராகத் திகழ்ந்தார். 'மணிமேகலை' என்னும் காப்பியத்தைத்

தந்த சீத்தலைச் சாத்தனார் மதுரையில் கூல வாணிகம் செய்து வந்தார், (கூல வாணிகம்—தானிய வியாபாரம்). மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் நெசவுத் தொழிலில் வல்லவராக இருந்தார். மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் என்ற புலவர் கொற்றொழிலில் வல்லவ ராக வாழ்ந்தார். அவர்களிலே பலர் இசையறிவும், நாடகப் புலமையும் மிக்கவர்கள். இவ்வாறு வாழ்வின் பல கூறுகளிலும் ஈடுபட்டு அனுபவம் பெற்ற அவர்கள் புலமைச் செல்வத்திலும் தன்னிகரற்று விளங்கினார்கள். இதனால், அவர்களின் இலக்கியப்படைப்புக்கள் வாழ்வின் பிரதிபலிப்பாகத் திகழ்கின்றன.

சங்க இலக்கியம் நூற்றுக்குத் தொண்ணூறு பகுதி தனிப் பாடல்களால் ஆனது. எட்டுத் தொகை நூல்கள் அனைத்தும் பல்வேறு புலவர்களின் பாடல்களைத் தொகுத்தவையேயாம். பத்துப் பாட்டு என்பன ஒவ்வொன்றும் நீண்ட பாடல்கள். பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் தலையாயது திருக்குறள். இவ்வாறு பெரும் பகுதி தனிச் செய்யுள்களையும் சிறுபான்மை தொடர்நிலைச் செய்யுள்களையும் கொண்ட சங்க இலக்கியம் நமது வரலாற்று விளக்கமாகவும், வாழ்வியல் குறிப்பேடாகவும் திகழ்கின்றது. இரண்டாயிரம் ஆண்டு கட்கு முற்பட்ட தமிழகத்தை நம் கண்முன் காட்டும் தொலைக்காட்சிக் கண்ணாடி என்று நாம் அவற்றைக் குறிப்பிடலாம். காலத்திற்கு அமைத்த பாலம்போல் விளங்கி நம்மைப் பண்டைத் தமிழகத்திற்குக் கொண்டு சேர்க்கும் அவ்விலக்கிய இலக்கணங்களை நாம் ஆழ்ந்து கற்றுப் பயிலுதல் வேண்டும் ?

பழந்தமிழ்ப் பேரரசர்களும், சிற்றரசர்களும் புலவர்கள்பால் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். அவர்களை வரவேற்று உபசரித்து ஒப்புரவு செய்தலையே தங்கள் வாழ்வின் இன்பமாகக் கருதினர். அக்காலப் புலவர்—புரவலர் தொடர்பு அறிந்து போற்றுதற்குரிய தாகும். புலவர்கள் வெறுமனே பாடிவிட்டு, ஏதேனும் பரிசிலைப் பெற்று, 'வயிறுகழுவும்' வாழ்க்கையுடையவர் களாக இருக்கவில்லை. அவ்வாறு பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டுப் பொய் பல கூறிப் பாடித் திரிவதை அவர்கள் வெறுத்திருக்கிறார்கள். அரசனின் அறநெறி ஆட்சியும், மக்களின் இன்பமும், நாட்டின் நலமுமே அவர்களது 'பரிசில் வாழ்க்கை'யின் குறிக் கோளாகத் திகழ்ந்திருக்கிறது. இதனால், அந்நாட் புலவர்கள் அரசர்களின் அமைச்சர்கள் போலச் சமய மறிந்து அவர்கட்கு இன்மொழியாலும் வன்மொழி யாலும் அறிவுரை கூறியிருக்கிறார்கள். ஒரு மன்ன ருக்கும் வேறு ஒரு மன்னருக்கும் இடையே வளர்ந்துள்ள பகையை ஒழிக்கவும், நட்பை வளர்க்கவும் உதவிய தூதுவர்களாகவும் அவர்கள் திகழ்ந்திருக்கிறார்கள். மன்னர்களுடன் சமமாகப் பழகி அன்பால் கட்டுண்ட நண்பர்களாகவும் அவர்கள் வாழ்ந்தார்கள். மக்களுடைய குறைகளை அரசர்கள்பால் எடுத்துச்சொல்லி அரசர்கள் அக்குறை களைந்து நல்லாட்சி நடத்த உதவும் மக்கள் தலைவர்களாகவும் புலவர்கள் திகழ்ந்தார்கள். உடன் வாழ்ந்த புலவர்களின் உயிரைப் பாதுகாத்தும், பலம் குறைந்த மன்னர்களின் பக்கம் நின்று வாதாடிப் படை வலிமிக்க பகை மன்னர்களின் சினத்தைத் தணித்தும் எல்லா உயிரினங்களிடத்தும் அன்பு செலுத்தியும் சிறந்த

அருளாளர்களாக அவர்கள் வாழ்ந்தார்கள். உலகத் தத்துவங்களின் அடிப்படைகளைத் தெளிவுபடுத்தித் தொகுத்தும் வகுத்தும் கூறிய சிந்தனையாளர்களாகவும் அவர்கள் காட்சிதருகிறார்கள். எனவே, வறுமைக்கும், அவ்வறுமையிலும் அவர்கள் காட்டிய செம்மைக்கும் அப்பால், அவர்கள் வாழ்வின் குறிக்கோள்களாக நாம் காண்பன பல. அவற்றின் விளைவே சங்க இலக்கியத்திற் பெரும்பகுதி எனத் துணிந்து கூறலாம். பழங்காலத்தில் மன்னர்கட்கும் புலவர்கட்கும் மிகநெருங்கிய தொடர்பு இருந்தமைக்குப் பல எடுத்துக்காட்டுகள் கூறலாம். பாரி கபிலரை எப்பொழுதும் தன் அருகில் துணையாகக் கொண்டிருந்தான். கபிலர் பாரியின் அமைச்சர்போலவும், தானைத் தலைவர் போலவும், நண்பராகவும் விளங்கினார். கோப்பெருஞ் சோழன், பொத்தியார் என்னும் புலவரை எப்போதும் தன்னருகில் வைத்திருந்தனன். அதியமான் நெடுமானஞ்சி ஔவையாரைப் பிரிய மனமின்றிப் பல தந்திரங்களைக் கையாண்டு அவரை எப்போதும் தன் அருகிலேயே கொண்டிருந்தனன். எனவே, பழந்தமிழ்ப் புலவர்களின் பரிசில் வாழ்க்கையையும் அவ்வாழ்வின் குறிக்கோள்களையும் நடைமுறைகளையும் நாம் ஆய்ந் தறியக் கடமைப்பட்டிருக்கிறோம்.

## இடைக்காலம்

தமிழ் இலக்கியத்தின் இடைக்காலம்—அஃதாவது கி. பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை இருளும் ஒளியும் கலந்த பகுதியாகும். இக்காலத்தில் களப்பிரர் ஆட்சி முதற் கொண்டு பல்வேறு வேற்று இனத்தவர்களின் ஆட்சியையும், பல்வேறு

சமயங்களின் ஆட்சியையும் காண்கிறோம். இடை யிடையே தமிழர் தம் உரிமை ஆட்சி தலையெடுத்த பகுதிகளும் இந்தக் காலத்தில் உண்டு. எனவே தமிழ்ப் புலவர்களின் நிலைமை பல்வேறு விதமாக மாறியது ; சீர்கெட்டுச் சிதைந்தது. பிற்காலத்தில் தமிழ்ப்புலவர் என்றால் வயிற்றுப் பிழைப்பே குறிக்கோளாகக்கொண்டு, பொய் புனைசுருட்டுப் பாடித் திரிபவர் என்ற கெட்ட பெயரும் ஏற்பட்டது. அவர்களைப்பற்றி " போற்றினும் போற்றுவர் பொருள்கொடாவிடில் தூற்றினும் தூற்றுவர் ' என்று கூறவும் தொடங்கினர். இதனால் தமிழ்ப்புலவர் பெருமை சிறிது சிறிதாகத் தேய்பிறை யாயிற்று.

இவ்விடத்தில் ஓருண்மையை நாம் நினைவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். சங்ககாலத்தில் எல்லா மன்னருமே வள்ளல்களாக, நற்பண்பினராக இருந்தார் களா ? எல்லாப் புலவர்களுமே சிறுமை அறியாப் பெருமித வாழ்வு வாழ்ந்தார்களா ? என்று சிந்தித்தால், அவர்களிலே பண்பற்ற மன்னர்களும் பெருமிதமற்ற புலவர்களும் உறுதியாக இருந்திருப்பார்கள். ஆனால், காலவெள்ளத்தில் அச்சிறுமையாளர்களின் பெயர்களும் மறைந்தொழிந்தன. பெருந்தன்மையாளர்களே பெரும் பான்மையினராக அக்காலத்து விளங்கியமையால் அவர்கள் பெயரும் புகழும் நிலைத்து நிற்கின்றன. இடைக்காலத்திலோ தமிழ்ப் புலவர்களிலே பலர் ' வயிற்றுப் பெருமான் பொருட்டுப்,' பாடிப் பிழைப்பவ ராகிவிட்டனர். ஆனால், பரம்பரைப் பண்புடன் பெருமித மாக வாழ்ந்த புலவர்களே இடைக்காலத்தில் இல்லை

எனல் தவறு. காலம் வளர வளர, தமிழ்ப் புலவர் வரலாற்றில் பெருமிதமிக்க புலவர் பரம்பரை குறைந்து கொண்டும், வயிற்றுப் பிழைப்பே கருதும் சிறு புலவர் தொகை வளர்ந்துகொண்டும் வந்திருக்கின்றன. எனவே, இடைக்காலத்து இலக்கியங்களிற் சிலவே இன்றும் நிலைத்து உலவுகின்றன.

### இக்காலம்

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதி தொட்டு வளர்ந்து வரும் மறுமலர்ச்சி இலக்கியம் நம் போற்றுதலுக்கு உரியதாகும். சங்கப் புலவர்களின் உயர்ந்த குறிக்கோள் களும் அஞ்சாமையும் அறிவு வன்மையும் இன்று மீண்டும் வளரக் காண்கிறோம். அன்று அரசர்கள் இருந்த நிலையில் இன்று மக்களும் மக்களரசியலாரும் இருந்து புலவர்களை ஆதரிக்கின்றனர். அரசியலாரை இடித் துரைக்கும் அமைச்சனாக, மக்கள் கருத்தை எடுத்துக் கூறும் தலைவனாகப் பெருங் கவிஞர் சுப்பிரமணிய பாரதி யார் திகழ்ந்தார். அரசியலார்க்கு வழி காட்டியாகவும், தொழிலாளர் துயர் துடைப்பவராகவும், இலக்கியச் சிந்தனையாளராகவும் தமிழர் தந்தை திரு. வி. க. திகழ்ந் தார். இவ்வாறு மக்களுக்காக வாழும், உயர்ந்த குறிக் கோளுடன் வாழ்ந்த கவிஞர்களையும் புலவர்களையும் இன்று பெரும் பான்மையாகக் காண்கிறோம். இது நம் நாட்டின் வளர்ச்சிக்கு அறிகுறியாகும்.

நமது நாட்டு, நாகரிகத்தின் சிறப்பையும் அந்நாக ரிகத்தை அழியாமல் காக்கும் இலக்கியங்களைப் படைத்த புலவர்களின் பெருமையையும் அறிந்தோம். சங்க காலப் புலவர்களின் பெருமித வாழ்வையும் அவர்கட்கும்

அரசர்கட்கும் இருந்த நெருங்கிய தொடர்புகளையும் உணர்ந்தோம். இடைக்காலத்தில் இப்பெருமைகள் அனைத்துமே அரசியல் ஆட்சி வேறுபாடுகளால் சிதைவுற்றமையையும், இன்று அவை மீண்டும் தலையெடுத்து வளர்ச்சியுற்று வருவதையும் கண்டோம். இனி, இப் பெருமையும் சிறப்பும் நமக்கு நிலைக்க வேண்டுமானால் கல்வியாளனாகத் திகழும்இந்நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனும் பழந்தமிழ்ப் புலவர்களின் வரலாறு, வாழ்க்கை முறை, குறிக்கோள்கள் முதலியனபலவற்றையும் கற்றுத் தெளியவேண்டும். அந்த அறநெறியில் மக்கள் மீண்டும் வாழத் தலைப்படுவார்களேயானால் நம் நாட்டில் மீண்டும் ஓர் 'பொற்காலம்' மலரும். இலக்கியமும் மொழியும் நாகரிகமும் மக்களின் இன்ப வாழ்வும் செழித்தோங்கும்.

# 2. பரிசில் வாழ்க்கை

பழந்தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கை எத்தகையது என ஆராய்ந்தால், சுருக்கமாகப் 'பரிசில் வாழ்க்கை' என்ற முடிவுக்கு வரலாம். புலவர்கள் அல்லது பாணர்கள் வள்ளல்களை நாடிச் சென்று தங்கள் பாடல்களையும் பிற கலைத்திறமைகளையும் காட்டி, அதைக் கண்டு மனமுவந்து அவர்கள் அளிக்கும் பரிசில்களைப் பெற்று வாழும் வாழ்வே பரிசில் வாழ்க்கை என்பதாகும். புலவர்கள் தங்கள் கல்வியிலேயே நாட்டம் செலுத்திப் புலமையின்பம் பெற்று வாழ்பவர்களாதலால், அவர்கள் தாம் வாழுதற்கேற்ற பொருள் சேர்க்கும் ஆற்றலுடையராயினும் அம் முயற்சியில் நாட்டம் செலுத்தாது புறக்கணிப்பர். தன் இயல்பாக நிகழும் இப் புறக்கணிப்பால் அவர்களை என்றும் வறுமை நாடி வந்துகொண்டிருக்கும். பொது நலம் போற்றும் கலைகளை வளர்க்கும் அன்னார்தம் வாழ்வு நாட்டின்

பொதுச்சொத்து ஆதலால், அக்கால அரசர் அதனை அருமையுணர்ந்து வரிசை யறிந்து பரிசில் நல்கி அவர்களை வாழ்விப்பர். எனவே பாட்டும் கலையும் அவை பெறும் பரிசும் பண்டமாற்றுப் பொருள்கள் என்று என நாம் உணரவேண்டும். வணிகத் துறையில் ஒரு பொருளைக் கொடுத்துப் பிறிதொரு பொருளை அதற்கு மாற்றாக வாங்குவது பண்டமாற்றாகும். அது போலத்தான் புலவர் பாட்டைப் பாடி அதற்கு மாற்றாகப் பரிசில் பெறுகிறார் எனவும், இஃதோர் 'பரிசில் வாணிகம்' எனவும் நாம் கருதுதல் கூடாது. கருதினால், அது கலைத் துறைக்கே இழுக்குத் தருவதாகும். புலவர்கள், பாணர்கள் நாட்டின் பொதுச் சொத்தாகிய மொழி, இலக்கியம், கலைகளை வளர்த்தார்கள். அத்தொண்டினை அறிந்து போற்றி அரசு, காணிக்கையாகப் பரிசில்களை அன்னார்க்குச் செலுத்தியது என்பதே 'பரிசில் வாழ்க்கை'யின் உட்பொருளாகும்.

**ஈதலும் ஏற்றலும்**

பரிசில் வாழ்க்கையைப் பற்றி மற்றுமொரு தவறான எண்ணம் சிலரிடையே உண்டு. அஃது, 'ஏற்பது இகழ்ச்சி,' என்றும், 'பசுவிற்கு நீர் வேண்டுமென்று இரந்தாலும் அதைப்போன்ற இழிவு நாவிற்கு வேறு இல்லை,' என்றும், 'ஈயென இரத்தல் இழிந்தன்று,' என்றும் பாடிய புலவர்களே, இவ்வாறு, வள்ளல்கள், செல்வர்களை நாடிச் சென்று இரந்து உண்டு வாழ்ந்திருக்கின்றனரே, என்பதாகும்.

ஏற்பது அல்லது யாசிப்பது இழிவுதான். எனவே, எவ்வளவு தாழினும் யாசித்து வாழ நினையாதே என,

'இரந்து எளிதாக வாழலாம்' என்று எண்ணும் முயற்சியற்றவர்களை அவர்கள் இடித்துரைத்திருக்கின்றனர். ஆனால், எவ்வித முயற்சியும் பயனற்றுப் போக யாசிப்பது தவிர வேறு வழியே இல்லை என்ற நிலைமை வந்தால், அப்போது என்ன செய்வது? ஒருவன் முயற்சியுடையவனே; ஆனால் சூழ்நிலையால் அவன் முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போகின்றன. அப்போது அவன் என்ன செய்வது? தற்கொலை புரிந்துகொள்வதோ தவறு. எனவே, இத்தகைய வாழ்க்கைச் சிக்கலுக்குத் தீர்வு காணும் மருந்தாக 'ஐயம் இட்டுண்' என்றும் நம் முன்னோர் சொல்லி வைத்தனர். எனவே, இந்நிலையில் இரத்தலும் மறுக்கமுடியாததாகி விடுகின்றது. இதை உணர்ந்தே வள்ளுவரும், 'ஈகை,' என வரும் பத்துக்குறட்பாக்களிலும், பிறர்க்குக் கொடுத்துப் புகழ் பெருக்குதலை வலியுறுத்தினர். 'கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று,' என்றும், அறிஞர்கள் கூறிச் சென்றனர். இதிலிருந்து முயற்சியற்றவனாக இரத்தல் தீது, தவறு என்பதும், முயற்சிகள் பல செய்தும் பயன்படாத நிலையில், வேறு வழியில்லையேல் பிறர்கொடுத்தலை ஏற்றலும் தவறன்று, என்பதும் பெறப்படுகின்றன.

## பாட்டும் பரிசிலும்

பாடிப் பரிசில் பெற்று வாழ்கின்ற புலவர்களது வாழ்வை முழுவதும் 'இரத்தலும் ஏற்றலும்' என்ற மேற்கண்ட சாதாரண மக்களின் வாழ்வுடன் ஒப்பிட்டு எண்ணுதல் கூடாது. உலகத்தில் இருவேறு வாழ்வுகள் உள்ளன. வள்ளுவர் பெருமான் இதனை நன்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

**" இருவேறு உலகத் தியற்கை : திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு "**

உலகத்தில் செல்வமே கருதி அதனையே சேர்க்கும் ஆற்றல் உடையராதல் வேறு; தெளிந்த புலமை நலமும் கலைத்திறமும் உடையராதல் வேறு. இவ்விரண்டும் ஒன்றின் ஒன்று இயல்பாகச் சார்வதில்லை. செல்வத்தையே நாடுவோன் கல்வி நலம் மிகப் பெறுவதில்லை. கல்வி நலம் உடையோன் அதிலேயே இன்பம் கண்டு மூழ்குதல் அன்றிச் செல்வம் சேர்க்க விழைவதில்லை. இவை யிரண்டும் மிக அருமையாக, ஆயிரத்தில் ஒருவரிடம் ஒன்று சேர்தல் கூடும். எனவே கல்வியாளராதலையும் செல்வரான் ஆதலையும் உலகத்தின் இருவேறு இயற்கைகள் எனத் திருவள்ளுவர் வகுத்துரைத்தார். எனவே புலவர்கள், பாணர்களிடம் வறுமை குடி கொண்டதில் வியப்பில்லை. அவர்கள் சிந்தனையெல்லாம் நினைவெல்லாம், கனவுகளும்கூட நாட்டின் நலத்தையும் கல்வி கலை வளர்ச்சியையுமே நாடி நின்றன. தங்கள் வயிற்றுக் கவலையைத் தீர்க்க அவர்கள் முயல்வதில்லை. இந்நிலையில் தங்கட்காக இல்லாவிட்டாலும் தங்களை நம்பியிருக்கும் குடும்பத்திற்காகவாவது பொருள் தேடக் கடமைப் பட்டுள்ளனர். இதனை அவர்கள் உணர்ந்து வருந்திஞல்—தங்கள் கவனத்தைப் பொருளீட்டச் செலவிட்டால் யாருக்கு நட்டம்? நாட்டிற்கன்றோ! இதனை யுணர்ந்த பண்டைய மன்னர்கள், 'வரிசை யறிந்து பரிசில்கள்,' நல்கினர். எனவே பரிசில் வாழ்வின் புறத்தோற்றம் இரத்தலும் ஏற்றலும் போலத் தோன்றினும், அதன் அகத் தோற்றம்—உட்பொருள்—நாட்டின் நலங் கருதிப் பாடுபடும் இலக்கியத் தலைவர்

கட்கு, கலைப் பாதுகாவலர்கட்கு, அரசன் அல்லது அரசியர் மனமுவந்து தரும் காணிக்கையும், அதனை அவர்கள் ஏற்று மேலும் ஊக்கமுடையராய்த் தத்தம் கலைத் துறையில் முன்னேறலுமே என்று கொள்ள வேண்டும்.

**கோவூர்க்கிழார் விளக்கம்**

கோவூர்க்கிழார் ஒருமுறை இப்பரிசில் வாழ்க்கையை நன்கு விளக்கிப் பாடியுள்ளார். அப்பாடலும் பாடற் கருத்தும் நாம் இங்குக் கருதத்தக்கனவாகும்.

இளந்தத்தனார் என்பவர் ஒரு பழந்தமிழ்ப் புலவர். அவர் ஒரு சமயம் உறையூருக்குச் சென்றார். அப்போது உறையூரை 'நெடுங்கிள்ளி' என்ற சோழ மன்னன் ஆண்டு வந்தான். நலங்கிள்ளி என்ற சோழ மன்னன் அவனுடன் மாறுபட்டவன். இருவருக்கும் தங்கள் சோழநாட்டு உரிமைகளைப் பங்கிட்டுக்கொள்ளுதலில் மனமாறுபாடு விளைந்திருக்கக் கூடும். புலவர் இளந் தத்தனார் சோழன் நலங்கிள்ளிக்கு மிகவும் வேண்டியவர் என்பதையும், அவனிடமிருந்துதான் உறையூருக்கு வந்துள்ளார் என்பதையும் நெடுங்கிள்ளி கேள்விப் பட்டான். அவனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. ஒருவேளை இப்புலவர் இளந்தத்தனார் சோழன் நலங் கிள்ளியின் ஒற்றனாக, நமது நிலைமைகளை உளவறிந்து போக வந்துள்ளாரோ ? என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் தோன்றியது. உடனே, அவன் சீற்ற மெல்லாம் அப்புலவர் மீது பாய்ந்தது. அதனால், அப் புலவரைக் கொல்லத் துணிந்தான் நெடுங்கிள்ளி.

கோவூர்க்கிழார் அச்செய்தியைக் கேள்விப்பட்டார். உடனே அவர் உள்ளம் துடித்தது. இளந்தத்தனாரைக்

காப்பாற்ற அவர் விரைந்தார். பழங்காலப் புலவர்கள் ஒருவரை ஒருவர் பொறாமையால் வெறுக்கவில்லை; சண்டையிட்டுக் கொள்ளவில்லை. பிறரை மதிப்பதால் தம் மதிப்பு உயரும் என அவர்கள் நம்பினார்கள். எனவே ஒருவரை ஒருவர் உயிர்போலப் போற்றி ஒழுகினார்கள். கோவூர்க்கிழார் அப்புலவர்களுள் குறிப்பிடத்தக்க அறிஞர். அவர் மற்றொரு புலவரின் உயிருக்கு ஆபத்து என அறிந்ததும் விரைந்து சென்றார். நெடுங்கிள்ளியைக் கண்டார். புலவர் வாழ்க்கையைப் பற்றிய உண்மைகளை அவனுக்கு எடுத்துரைத்தார். உண்மை யறிந்த நெடுங்கிள்ளி, பெரும் புலவரின் வாக்கிற்கு மதிப்புக் கொடுத்து, உடனே இளந்தத்தனாரை விடுவித்தான். தீய கொலைத் துன்பத்தினின்றும் ஒரு புலவரின் உயிர் காப்பாற்றப்பட்டது. அப்போது கோவூர்க்கிழார் எங்ஙனம் புலவர்களின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார் என்பதே, இங்கு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. பரிசில் வாழ்க்கையின் விளக்கமே அவர் பாடலில் ஓவியம் போலத் தீட்டப் பெற்றுள்ளது.

“பரிசில் வாழ்க்கை எத்தகையது? அது பிறருக்குத் தீமை செய்யக்கூடியதா? ஒற்று உரைத்து உயிர் வாழ்வதா? வஞ்சகம், பொய் இவற்றைத் துணையாகக் கொண்டதா?......அல்ல...அல்ல.” என்ற கருத்தினை உணர்த்தத் தொடங்கிய கோவூர்க்கிழார் நெடுங்கிள்ளியைப் பார்த்துக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

“பழுத்த மரங்களை நாடிப் பறவைகள் செல்லுவது போல வள்ளன்மையுடைய அரசர்களை எண்ணி அவர்களை நாடிப் புலவர்கள் செல்லுவார்கள். அவ்

வள்ளல்கள் வாழும் இடம் எவ்வளவு தூரத்திற்கு அப்பால் இருந்தாலும், 'இது நீண்டதூரம் ஆயிற்றே,' என்று, மனந்தளராமல் பல்வேறு காடுகளையும் கடந்து செல்லுவார்கள். பிறகு வள்ளல்களைக் கண்டு தமது திருந்தா நாவினால் இயன்றவரை முயன்று பாடுவார்கள். அவ்வள்ளல் கொடுத்ததே போதுமென மனமகிழ்ந்து பெற்றுக் கொள்வார்கள். அவ்வாறு பெற்றதைத் தாமே அருந்தாமல் தம் சுற்றத்தார்க் கெல்லாம் கொடுப்பார்கள். 'பிறகு வேண்டுமே' என்ற எண்ணம் இன்றித் தாமும் உண்பார்கள். மற்றையோர்க் கெல்லாம் மனஞ்சுருங்காமல் அள்ளிக் கொடுப்பார்கள். தங்கள் தகுதியை உயர்த்திக்கொண்டு அதற்கு ஏற்ப மேலும் மேலும் உயர்வாகப் பரிசில் பெற்றுச் சிறக்க வேண்டும் என்பதே அவர்களின் தலையாய முயற்சி யாகும். இத்தகைய பண்புகளெல்லாம் அமையப் பெற்றதே பரிசில் வாழ்க்கை.

எனவே, இத்தகைய பரிசில் வாழ்க்கை பிறர்க்குத் தீமை செய்ய நினைப்பதில்லை. பகைவர் நாணுமாறு பெருமிதத்துடன் திறமைபொருந்த இனிதாக வாழும் அஃதொன்றே இவ்வாழ்வின் வளர்ச்சியாகும். மேலும் உயர்ந்த புகழ்ச் சிறப்பினையுடைய, மண்ணுலகை ஆளும் செல்வச் சிறப்பினையுமுடைய நும்போன்ற பேரரசர் களின் தலைமைப்பாட்டையும் அப்பரிசில் வாழ்க்கை உடையதாகும்."

இவ்வாறு கோவூர்க்கிழார் பரிசில் வாழ்க்கையின் தீதறியா இயல்பினை விளக்கி இளந்தத்தனரைக் காப்பாற்றினர். அப் பாடல் வருமாறு :

"வள்ளி யோர்ப் படர்ந்து புள்ளின் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீது அறிந்தன்றோ இன்றே,
திறப்பட

நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி(து) ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ஆள் செல்வம் எய்திய
நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே" (புறம்-47)

கோவூர்க்கிழார், அருமையாகவும், இனிமையாகவும் கூர்மையாகவும் 'பரிசில் வாழ்க்கை'யின் சிறப்பைக் கூறுகிறார். அரசனைப் பார்த்து—மூவேந்தருள் ஒருவனாகிய சோழ மன்னனைப் பார்த்து—"உம்மைப் போன்ற பெருமையும் தலைமையும் கொண்டதே புலவர் வாழ்க்கை" என, அவர் அறிவுறுத்தும் திறம் எண்ணுதற்குரியது. ஒரு நாட்டின் மன்னன் அந்நாட்டு மக்களின் வேறல்லன் ; எங்கிருந்தோ வந்தவன் அல்லன் ; அவனே அந்நாட்டுத் தலைமைக் குடிமகன் எனக் கருதிப் போற்றிய நாடன்றோ இது !

"பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி"

என்ற, வரிகள் புலவர்களின் பெருமித வாழ்வைப் புலப்படுத்துகின்றன. கேவலம், வயிற்றுப்பாடு மட்டும் அவர்கள் குறிக்கோளன்று. பெற்ற பரிசில் 'இந்திரர் அமிழ்தமே' ஆயினும், அவர் தாமே தனித்துண்டு மகிழ

தலில்லை. தாமும் அனுபவியாது பிறர்க்கும் கொடாது பெருஞ்செல்வத்தை, 'வைத்திழக்கும்,' வன்கண்மை செல்வர் சிலரிடத்திலே இருக்கலாம். கல்வியாளரிடம் ஒரு காலும் அத்தாழ்வுமனப்பான்மை இருந்ததில்லை.

பழுத்த மரத்தை நாடிச்செல்லும் பறவைகளைப் போல வள்ளல்களையே நாடிச் செல்வர் புலவர். இவ் வுவமை அறிந்து மகிழுதற்குரிய ஒன்ருகும். புலவர் வாழ்வு பறவைகளின் வாழ்வுபோன்றதே. சுதந்திர மானது; தன்னை மறந்தது; கற்பனை வானிலே உலவுவது! பழுத்த மரங்களையே நாடிச்செல்வது! ஆம். பெருஞ் செல்வராயினும் ஈயாத கருமிகள் தம் அருகில் இருப்பா ராயின் அவரை நாடிப் புலவர்கள் செல்வதில்லை. காடுகள் பாலைவனங்களைத் தாண்டிச் செல்லவேண்டி யிருந்தாலும் ஈர மனம் படைத்த வள்ளல்களையே நாடிச் செல்வர் !

'வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கை' என்ற சொற்ருெடரில், புலவர்களின் குறிக் கோள்களைக் காண்கிருேம். அவர்கள் தாங்கள் பெறும் பரிசிற் பொருள்கள் மிக அதிகமாகவும் சிறப்பாகவும் இருக்க வேண்டுமென விரும்பினர். 'பிற புலவர்களிலும் சிறந்த புலமையாளர் இவர்; பிறர் எவரும் பெருத அளவு பரிசில் பெற்றவர் இவர்' என்பவையே, அக்காலப் புலவர்க்குப் பெருமையும் புகழுமாக இருந்தது. வயிற்றுப் பசியை நீக்கமட்டும் அல்ல; வானுர்ந்த புகழ்ப் பசியைத் தணித்துக்கொள்ளவும் அவர்கள் பாடினர். தங்கள் பாடல் தலைசிறந்தது; தங்கள் புலமை ஒப்பற்றது;

எனப் பாராட்டப் பெறும் வண்ணம் அவர்கள் தங்கள் புலமைச் செல்வத்தையும் கலைச் செல்வத்தையும் பெருக்கினர்; போற்றினர்; வளர்த்தனர். இவ் வரிசை பெற விழையும் போட்டிமனப்பான்மையே அக்காலப் புலவர்களின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்தது. இஃதின்றேல், புலமை ஆர்வமற்றுப் போயிருக்கும்; வளர்ச்சி தடையுற்றுச் சிதைந்திருக்கும்; புலமை வாழ்வில் சுவையும் மகிழ்வும் புகழும் கலந்திராது.

**பொய்யாச் செந்நா**

புலவர் பரிசிலை வயிற்றுப் பிழைப்பு ஒன்றே கருதிப் பெற விழைவாராளுல், அஃது உயர்ந்த குறிக் கோளாகாது. அத்தகைய புலவர்கள் சிலரை நமது இருண்ட இலக்கிய காலமாகிய பிற்காலத்தே காண்கிறேம். அரசர்கள், செல்வர்களிடத்துச் சென்று அவர்களிடம் இல்லாததை ஏற்றி யுரைத்துப் பொய்யாகப் புகழ்ந்து அவர்கள் தரும் இழிந்த பொருளைக் கொண்டு வாழும் வாழ்வு சங்கப் புலவர்களிடம் இல்லாத ஒன்ருகும். அங்ஙனமும் சிலர் வாழ்ந்திருத்தல் கூடாதோ எனச் சிலர் இன்று விவாதிப்பாராயின், அத்தகைய வாழ்வுகள் தமிழிலக்கியத்தில் தாமிருந்த சுவடும் இன்றி மறைந்தொழிந்ததொன்றே, அக்காலப் புலவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர் பெருமித வாழ்வு வாழ்ந்தனர் என்பதற்குச் சான்ருகும் எனக் கூறலாம்.

அக்காலப் புலவர்கள் வள்ளல்களின் பண்புகளை உயர்வுபடுத்தி—உயர்வு நவிற்சியாகப் பாடினர்களே

யன்றி, இல்லாதவற்றை எடுத்துரைத்ததே இல்லை. இவ்வாறு பொய்யே கூறாது உண்மையே கூறும் பழக்க முடைய நாவே, 'பொய்யாச் செந்நா' ஆகும். வன்பரணர் என்ற புலவர் இதனை நன்கு விளக்குகின்றார். "பெருமை யற்ற மன்னர்களைப் புகழ வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, அவர்களிடம் இல்லாத பண்புகளையும், செய்யாத அருஞ்செயல்களையும் கூறிப் புகழ்ந்து பாடுதல் எம்முடைய சிறிய செம்மையான நாவிற்கு இயலாத தாகும்," என, வன்பரணர் கூறுவதிலிருந்து அவர்கள் மறந்தாலும் அவர்கள் நா உண்மை கூற மறவாது என அறிகிறோம்.

இவ்வாறு, பரிசில் வாழ்வைப் பலபட விளக்கி யுள்ளார்கள் பண்டைத் தமிழ்ப் பேராசிரியர்கள். விளக்கிய தோடமையாது, அவ்வழியே வாழ்ந்து காட்டி யுள்ளனர்; நமக்கு வழி காட்டியிருக்கின்றனர்.

## 3. அமைச்சரின் அறிவுரை

பழங்கால அரசியலில் அமைச்சர்கள் முக்கிய அங்கமாகத் திகழ்ந்தனர். அமைச்சர்களின் பண்புகளையும், செயல் முறைகளையும் வள்ளுவம் தொகுத்துரைக்கின்றது. அமைச்சர்கள் கல்வி அறிவுடையவர்களாகத் திகழ வேண்டும். உலகத்து இயற்கையினை ஆராய்ந்து அறிந்து செயலாற்றவேண்டும். அரசன் சினந்துகொள்வான் என அஞ்சாமல் அவன் தவறுகளை எடுத்துக் காட்டி, இடித்துக் கூறித் திருத்துதல் வேண்டும். பலவாறு சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து நேரான வழி காட்டவேண்டும். கருவி, காலம், செய்யும் முறை, செயல்வகை ஆகிய இவையனைத்திலும் வல்லவர்களாக வழி காட்டிகளாக அமைச்சர்கள் திகழவேண்டும். சொல்வன்மை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல் வகை முதலியன அவர்கட்கு இன்றியமையாத

பண்புகளாம். கேட்டவர்களின் உள்ளத்தைக் கவர்ந்து, கேளாதவரும் கேட்க விழையுமாறு, அவர்கள் பேச வேண்டும். இத்தகைய நாவன்மையுடையவராயின், அவ் அமைச்சர்தம் அறிவுரையை அரசும் நாடும் விரைந்து கேட்டு நலமடையும். இவ்வாறு திருவள்ளுவ ரால் விளக்கப்பட்ட அமைச்சர்தம் பண்புகளில் பல வற்றைப் பழந்தமிழ்ப் புலவர்களிடத்தும் நாம் காண் கிறோம். அரசன் தவறிய இடங்களில் திருத்தியும், தக்க சமயங்களில் நல்வழி காட்டியும், பகையரசர்கட்குத் தம் அரசரின் பெருமையை நினைப்பூட்டியும், நாட்டின் நன்மைக்காகச் செய்யவேண்டிய செயல்முறைகளை வகுத்துக் கூறியும் அப்புலவர்கள் பணியாற்றி யுள்ளனர். அவற்றுட் சிலவற்றை நாம் இங்கே காண்போம்.

**வரி வாங்கும் முறை**

அரசன் வருமானத்தில் ஆறிலொன்று பெற வேண்டும் என்பது அக்காலப் பொதுவிதி. ஆனால், அரசர்கள் அனைவரும் முறைப்படி வரி வாங்கினர் எனக் கூறவியலாது. அரசன் அறநெறி வழுவாது நடந்தன னாயினும், அவன் கீழ்ப்பட்ட பல்வேறு அதிகாரிகளும் அரசன் நெறிப்படி நேர்மையாக நடந்தனர் என்று கூற முடியாது. சில அரசர்கள் தவறு இழைத்திருக்கக் கூடும்; அல்லது அரசர்கள் அறியாமல் அதிகாரிகள் தவறு செய்திருக்கக் கூடும். பாண்டியன் அறிவுடை நம்பி என்ற அரசன் சிறந்த பண்பாளன். புலவரைப் போலப் பாடும் ஆற்றலும் பெற்றவன். அவன் அறநெறி தவறாமல் ஆட்சி செய்து வந்தான். ஆனால், எவ்வாறோ அவனறியாமல் சில தவறுகள் அவனது

ஆட்சியில் நேர்ந்தன. வரி வாங்கும் முறையில்தான் தவறு நேர்ந்திருக்கிறது. இதையறிந்தார், பிசிராந்தை யார் என்ற புலவர். அவர் 'பிசிர்' என்ற பாண்டிய நாட்டு ஊரினர். அவர் அரசனிடம் நேரே சென்றார். ஓர் அழகிய பாடல் மூலம் வரிவாங்கும் முறையை விளக்கிக் கூறி அவனை நல்வழிப் படுத்தினார்.

முதலில், மேனாட்டுப் பேராசிரியர் ஒருவர் வரி வாங்கும் முறையைப் பற்றிக் கூறிய கருத்தும் இங்கு நினைவுகூரத் தக்கது. "வரி வாங்குவது என்பது வாத்தி னுடைய சிறகுகளைப் பறிப்பதுபோல. எவ்வளவு குறை வான சத்தத்தில் எவ்வளவு அதிகமான சிறகுகளைப் பறிக்க முடியுமோ அவ்வளவு பறிக்கவேண்டும்" என்பது அவருடைய கருத்து. அதாவது குடிமக்களை வருத்தாமல், அவர்கள் சத்தமிடாவண்ணம், எவ்வளவு அதிகமான வரிகளைப் போட முடியுமோ போடலாம். அவர்கள் வருந்திச் சத்தமிடும் எல்லையை மிஞ்சி வரி போடுவது ஆபத்து என்பது அவர் கருத்து. தமிழ கத்துப் பொருளியற் பேராசிரியராகிய பிசிராந்தையார் வரி வாங்கும் முறைபற்றித் தந்துள்ள கருத்து இன்னும் சிறந்ததாகும்.

"யானைக்கு உணவிடுகிறோம். நெல் முதலிய வற்றைக் கலந்து கொடுக்கும் கவள உணவே, யானை உணவாகும். ஒரு வேலி நிலத்தில் இருபதில் ஒரு பாக மாகிய—ஒரு மாநிலத்திற்கும் குறைந்த நிலப் பகுதியில் விளைந்த நெல்லாயினும் காய்ந்த நெல்லை அறுத்துக் கொண்டுவந்து கவள உணவாக யானைக்கு ஊட்டினால்

அது பல நாட்களுக்குப் பயன்படும். ஆனால், யானை தானே வயலிற் புகுந்து உண்ணுமானால் நூறு காணி நிலமாக இருந்தாலும், அதில் விளைந்த நெல்லுணவு அதன் வாயிற்புகுந்து உணவாவதைக் காட்டிலும் அதனுடைய கால்களால் மிதிக்கப்பட்டுப் பெரிதும் அழிக்கப்படும். அதுபோல, அறிவுள்ள அரசன் அற நெறி தவறாமல் வரி வாங்குவானாயின் அவன்பால் செல்வம் பெருகும்; குடிமக்களும் உயர்வர். அவ்வா றன்றி, அரசன் அறிவும் அருளும் அற்றவனாக நாள் தோறும் அரசியல் முறையை அறியாமல் இனிமையாகப் பேசி ஆரவாரம் செய்யும் அதிகாரிகளின் சொற்கேட்டு, குடிமக்கள் தன்பாற் கொண்ட அன்பு குறையுமாறு பெறுகின்ற வரியை விரும்புவானாயின், யானை புகுந்த நிலம் அழிவதுபோல, அவனும் உண்ணாமல் அவனால் ஆளப்படும் உலகமும் வாழாமல் எல்லாம் அழிந்து போகும்," என்று பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அமைச்சர்போல அறிவுறுத்துகிறார், பிசிராந்தையார்.

இப்பாடற் கருத்து மிகவும் சிறப்புடையதாகும். வரிவாங்கும் முறையில் சிறப்புடையது எது? வரியால் அரசும் வாழவேண்டும்; நாடும் வளரவேண்டும். இவ்வாறு திட்டமிட்டு வாங்கும் வரியே சிறந்ததாகும். யானை புகுந்த நிலம் அதற்கும் உணவாகாமல் பிறர்க்கும் பயன்படாமல் அழியும். அதுபோல அரசன் கண்ணை மூடிக்கொண்டு குடிகளை வருத்தி வரிவாங்கத் தொடங் கினால் குடிகள் நலிவுற்று அழிவர். அவர்கள் வாழ்வு சிதைந்தால் அரசனின் வருமானமும் சுருங்கிவிடும். அவ்வாறன்றி வயல் நெல்லைக் கவளமாக்கி முறைப்படி

கொடுத்தால் யானைக்கு உணவு பல நாட்களுக்குக் கிடைக்கும். அரசனும் யாரிடம் வரிமிகுதி வாங்க வேண்டும், யாரிடம் குறைத்து வாங்கவேண்டும் என ஆராய்ந்தும், மழை பெய்யாக் காலத்தில் வரியைத் தள்ளுபடி செய்தும், நல்ல விளைவுக் காலத்தில் வரியின் அளவைச் சிறிது அதிகப்படுத்தியும், இவ்வாறு வரி வாங்குவானுனல், அவனும் உயர்வான், அவனுல் ஆளப் படும் நாடும் உயரும். இம்முறையைச் சிறந்த உதார ணத்தின் மூலம் விளக்கும் பிசிராந்தையார் நம் போற்று தலுக்கு உரியவராவார்.

## உழவுத் தொழிலின் சிறப்பு

சிற்றூர்களையே மிகுதியாகவும் உழவுத் தொழிலையே உயிராகவும் கொண்டநாடு நம் நாடு. நம் நாட்டுப் பொருளாதாரம் இவ்வுழவுத் தொழிலையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என இக்காலப் பேராசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி,' எனப் போற்றுகின்றூர் திருவள்ளுவர். இந்த உழவுத் தொழிலின் பெருமையை அறிந்து அதனை வளர்க்கும் வழி துறைகளை நாடிச் செயலாற்றுவதே, அன்றும் அரசர்களின் கடமையாக விருந்தது ; இன்றும், அரசியலாரின் கடமையாக விருக்கின்றது.

வெள்ளைக்குடி நாகனுர் என்ற புலவர் வெள்ளைக் குடி என்ற ஊரில் வாழ்ந்தவர். அவர் உழவுத்தொழில் நடாத்தி வாழ்ந்தனர். அக்காலத்தில் சோழநாட்டை ஆண்டுவந்தவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன். அவனது ஆட்சியில் நிலவளம் மிகுந்த சோழ

நாட்டில் உழவுத் தொழில் அதிகாரிகளால் புறக் கணிக்கப்பட்டது. பல நிலங்கள் விளைவற்றன. நாக ஞரும் தமது நிலங்களில் விளைவு பெருமையால் வரிகட்ட இயலாதவராயினர். அவர் வாழ்ந்த வெள்ளைக்குடிச் சிற்றூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பல உழவர் பெருமக்கள் வரிகட்ட முடியாமல் திண்டாடினர். அரசியல் அதிகாரிகளோ எப்படியும் தங்கட்கு வரிகட்ட வேண்டுமென அடிக்கடி வலியுறுத்தி வந்தனர். தொடர்ந்து இரண்டு மூன்று ஆண்டுகள் விளைவு குறைந்தமையால் வரிகட்டுதல் முற்றும் இயலாத தாயிற்று. இந்நிலையில் மக்களின் சார்பாக வெள்ளைக் குடி நாகனார் அரசனிடம் நேரே சென்றார். நிலைமையைக் குறிப்பாக விளக்கி உழவுத்தொழிலின் பெருமையை எடுத்தோதினர். அரசனும் உண்மையுணர்ந்து, 'பழஞ் செய்க் கடனை' நீக்கினான். புலவரையும் மக்களையும் வரித்துன்பத்தினின்றும் காத்தான். வெள்ளைக்குடி நாக னாரின் பாடற் கருத்து வருமாறு :

" அரசே ! இத் தமிழ்நாட்டை ஆட்சி செய்கின்ற மூவேந்தர்கட்குள்ளே இன்று அரசு எனச் சிறப்பித்துக் கூறக் கூடியது உனது அரசேயாகும். சேர, சோழ, பாண்டிய நாடுகளாகிய மூன்றினுள்ளும் சிறப்புடையது உனது நாடேயாகும். ஆகவே, இத்தகைய சிறந்த நாட்டின் பெருமை வாய்ந்த அரசனாகிய நீ, உன்னைக் கண்டு தங்கள் குறைகளைக் கூறவரும் குடிமக்களுக்குக் காட்சிக்கு எளியனாகத் திகழவேண்டும். இது, குடி மக்களின் மகிழ்ச்சியைப் பெருக்குதற்கு நீ செய்யத்தகும் முதற்காரியம் ஆகும்.

மேலும், உனது சிங்கஞ் சுமந்த ஆசனத்தின் மேலிருக்கும் வெண் கொற்றக்குடை, மக்கள் வெயிலை மறைக்கக்கொண்ட குடைபோன்றதன்று. குடிகளை வருத்தாமல் நீ ஆள்வதற்கு அறிகுறியாகப் பிடிக்கப் பட்ட குடையாகும். உன் படை வீரர்கள் போர்க் களத்தில் எதிர்த்துவரும் பகைவர்களைத் தாக்கி அழித்து அவர்கள் தோல்வியுற்று ஓடுவதைக் கண்டு ஆரவாரம் செய்யும்படியான வெற்றி மகிழ்ச்சி உனக்கு எவ்வாறு வாய்த்தது ? அவ்வெற்றிகளனைத்தும் உன் நாட்டு உழவர்கள் விளைத்துத் தந்த விளைவின் பயனேயாகுமென நீ உணரல் வேண்டும். இதனை நீ நன்கு உணர்ந்து கொண்டால், நின் மனத்துக்கு இனிமையுண்டாகும்படி பேசுகின்ற அதிகாரிகளின் சொற்களை அப்படியே நம்பி விடமாட்டாய். உழவுத் தொழிலாளர்களை முதன்மை யாகக் கருதி அவர்களைக் காப்பாற்றி அதன் மூலம் நாட்டின் நலத்தைப் பாதுகாப்பாயாக. நீ அங்ஙனம் செய்தால் நினது பகைவரெல்லாம் நின் அடிபணிந்து போற்றுவர்.

இவ்வாறு அரசன் கிள்ளிவளவனது ஆட்சிக்குறை பாடுகளைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் சுட்டிக் காட்டி, வெள்ளைக்குடி நாகனார் திருத்துகின்றார். அருகிருக்கும் நல்லமைச்சர் செய்யவேண்டிய அருஞ் செயலை, இங்கு நாகனார் ஆற்றுகின்றார். அவரது அறிவுரை கேட்டு நடந்து, கிள்ளிவளவனும் பெருமை பெறுகின்றான்.

## இடித்துரைத்தல்

சோழ நாட்டில் ஆவூர் என்ற ஊரைத் தத்தமக்கு உரியதென நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் போரிட்டனர். நெடுங்கிள்ளி அவ்வூரினுள் முதலிற் புகுந்து கொண்டு, மதிற் கதவினை அடைத்துக்கொண்டான். நலங்கிள்ளி தனது உரிமையை நிலைநாட்ட எண்ணி வெளியே முற்றுகையிட்டான். இவ் இருபேர் அரசர்களின் சினமும் போரும் மக்கட்குத் துன்பம் தருவதாயிற்று. வெளியே நின்று நலங்கிள்ளி போருக்கு அறை கூவுகின்றான். உள்ளேயிருந்துகொண்டு கதவைத் திறவாமல் அமைதியாக இருக்கிறான் நெடுங்கிள்ளி. அடைத்த கதவால் போக்கு வரவு தடைப்பட்டது. மக்கள் வெளி உலகத் தொடர்பை இழந்தனர். உணவுப் பொருள் சுருங்கலாயிற்று. இத்தீராத போரைத் தீர்த்துவைப்பது யார்? கோவூர்க்கிழார் என்ற புலவர் பெருமகனார் மக்கள் துயரைத் தீர்க்க முயன்றார்.

கோவூர்க்கிழார் இரண்டுஅரசர்களின் செயல்களையும் நன்கு சிந்தித்தார். யார்மீது தவறு? என ஆராய்ந்தார். இறுதியில் நெடுங்கிள்ளி செய்வதே தவறு எனப் புலப்பட்டது. அவனுக்கு ஆவூரில் உரிமையின்றேல் அறநெறிப்படி அதனை நலங்கிள்ளிக்கு விட்டுவிடவேண்டும்; உரிமையிருந்தால் மறநெறிப்படி அதற்காக வழக்காடும் நலங்கிள்ளியிடம் போரிட்டுத் தன் உரிமையை நிலைநாட்டவேண்டும். இரண்டும் செய்யாது ஊரினுள் அடைத்த கதவினனாக அடங்கியிருத்தல் தவறன்றோ? இதைத்தான் எடுத்துக்கூறி இடித்துறைத்தார் கோவூர்க்

கிழார். முற்றுகை தவிர்ந்து மக்கள் துயரம் நீங்குமாறு செய்தார்.

" நெடுங்கிள்ளியே! நீ ஆவூரின் மதிற் கதவை அடைத்துவிட்டு அமைதியாக இருக்கின்றாய். அதோ, யானைகளைப் பார்! குளங்களில் படிந்து மகிழ்தற்கு இயலாமையால் வருந்துகின்றன; கவளங்கள் உண்ணப் பெறாமல் பிளிறுகின்றன; கட்டுத்தறிகளில் கட்டப்பட்டுள்ளபடியே துதிக்கையைப் புரட்டி வெய்துயிர்த்து இடியோசை போல முழங்கி வருந்துகின்றன.

குழந்தைகள் பாலின்றி அழுகின்றனர்; மகளிர் பூ இல்லாமல் கூந்தலை முடித்துக்கொள்கின்றனர்; பல்வேறு தொழில்களால் சிறப்புற்ற வீடுகள் தோறும் அழுகுரல் கேட்கின்றது. வேந்தே! இவை அனைத்தையும் கேளாமல் நீ இங்கே இனிமையாக இருப்பது மிகவும் கொடுமையாகும். நெருங்குதற்கரிய வலிமையுடைய பெருமகனே! அறநெறி போற்றினால் இது உன்னுடையது என மதிற் கதவைத் திறந்து விடுக. இன்றேல், மறநெறி போற்றுவதாயின் நலங்கிள்ளியுடன் போர் செய்யக் கதவைத் திற! அறநெறியும் மறநெறியும் போற்றாமல், வலிய கதவை அடைத்துவிட்டு நீண்ட மதிலாற் சூழப்பட்ட நகரின் ஒரு புறத்தே ஒடுங்கியிருக்கும் உன்னிலை, காணுங்கால் நாணந் தருவதாகும்!"

என்று, மிக வன்மையாக இடித்துரைக்கின்றார் கோவூர்க்கிழார். " **உறுதி உழையிருந்தான் கூறல்**

**கடன்"** என்ற, அமைச்சியற் பண்பை நாம் கோவூர்க் கிழாரிடம் காண்கிறோம். அவர் முயற்சியால் முற்றுகை தவிர்த்து மக்கள் இன்பம் உற்றனர்.

**மக்கள் தலைவர்**

இக்கால அரசியல் முறைப்படி அமைச்சர்கள் மக்களின் பிரதிநிதிகளாக, மக்களின் தலைவர்களாக, மக்கள் குரலை எதிரொலிப்பவர்களாகத் திகழவேண்டும். இப் பண்பையும் பண்டைப் புலவர்களிடம் காண்கிறோம். அரசனுக்கு உறுதி கூறுகின்ற அதே நேரத்தில், மக்களின் குறைகளையும் அரசனுக்கு விளக்கிக் கூறினார்கள். மேலே குறிப்பிட்ட பிசிராந்தையார், வெள்ளைக் குடி நாகனார், கோவூர்க்கிழார் மூவரும் வழிகாட்டி அறிவுரை கூறினார்கள். அவை எல்லாம் மக்களின் நலன் பற்றியேயன்றோ? மக்களின் குறைகளையன்றோ விளக்கினார்கள். வரி வாங்குதலில் நேர்மை வேண்டும்; உழவுத் தொழிலை மதித்துப் போற்றவேண்டும். குடிமக்கள் வருந்துமாறு அரசன் நடக்கக்கூடாது என்ற இவ் வறிவுரைகள் மக்கள் குரலுக்கு மதிப்புக் கொடுப்பன வன்றோ. பழைய கோனாட்சி முறையில் குடியாட்சிப் பண்புகள் மிக்கிருந்தமைக்கு முதன்மையான காரணம் புலவர்களே எனலாம். அவர்களே அரசர்க்கும் மக்கட்கும் இடையே அரசியல் தொடர்பாளர்களாகத் திகழ்ந்தார்கள்.

# 4. தூதரின் தொண்டு

ஓர் அரசர்க்கும் மற்றொருவர்க்கும் தொடர்பு உண்டாக்குதலும் பகைமை தவிர்த்து நட்புண்டாக்கலும் தூதர்களின் இன்றியமையாச் செயல்களாம். பண்டையப் பெரும் புலவர்களிடம் இத் தூதுவர்களின் தொண்டு மனப்பான்மையையும் நாம் காண்கிறோம். புலவர்கள் பல்வேறு அரசர்களை நாடிச் சென்று, கண்டு மகிழும் வாழ்க்கையினராதலின் அவர்கட்கு இத் தொண்டு எளிதாயிற்று. மேலும், தூதுவர்கட்கு எனக் குறிக்கப்படும் பண்புகளும் இப் புலவர் பெருமக்களிடம் நிறைந்திருந்தன.

தூதுவர்கள் அன்புடையவர்களாய், நல்ல குடியிலே பிறந்தவர்களாய், வேந்தர்களால் விரும்பப்படும்

பண்பாளர்களாய்த் திகழவேண்டும். ஆராயும் அறிவும், தம் அறிவுக்கு எட்டியவற்றை எடுத்துரைக்கும் சொல்லாற்றலும் வேண்டும். எனவே அறிவும், அழகிய தோற்றப் பொலிவும், ஆராயும் கல்விப் புலமையும் உடையவர்களையே பழைய மன்னர்கள் தூதர்களாகத் தேர்ந்தெடுத்தனர். தூது செல்பவர்கள் தமது கருத்தைத் தொடுத்துச் சொல்லி விளக்குவர் ; தீமை தரும் சொற்களை மறந்தும் சொல்லாது நீக்குவர் ; கேட்பார் மனம் மகிழுமாறு சொல்லி நன்மையே விளைவிப்பர். தங்கள் கடமையை அறிந்தும், காலமறிந்தும், இடமறிந்தும் ஆராய்ந்து சொல்லுபவர்களே தலைமை பொருந்திய தூதர்களாவர். இவ்வாறெல்லாம் தூது செல்வோரின் பண்புகளைத் தொகுத்துத் தெளிவுபடுத்திக் கூறும் திருக்குறட் கருத்துகளுக்கு எடுத்துக்காட்டாகப் பழந் தமிழ்ப் புலவர்கள் விளங்கினர். அதனை இரண்டு உதாரணங்களால் காண்போம்.

## கோவூர்க்கிழார் தூது

கோவூர்கிழார் சிறந்த புலமையாளர் ; அருட்செல்வர். ஒருமுறை சோழர் குடியினுள்ளே நிகழவிருந்த பெரும்போரை அவர் தமது சொல்வன்மையால் தடுத்துக் காத்தார். ‘ உறையூர் ’ என்பது சோழர் குடியின் பழம்பெரும் தலைநகராகும். அது காவிரிப்பூம் பட்டினத்திலும் தொன்மை வாய்ந்தது. சங்க இலக்கியத்தில் இவ் உறையூரின் பெருமை பலபடக் கூறப் படுகின்றது. இவ்வூரின் உரிமை பற்றி நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் பகைமை ஏற்பட்டது. அதனால் உறையூருட் புகுந்து நெடுங்கிள்ளி மதில்

கதவை அடைத்துக் கொண்டான் ; நலங்கிள்ளி முற்றுகை யிட்டான். இருதிறத்தும் கடும்போர் நிகழுதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம்முறை, போரைத் தவிர்க்கும் எண்ணத்துடன் கோவூர்கிழார் சென்ருர். ஆற்றல் மிக்கவனுகிய நலங்கிள்ளிக்கு அறிவுரை கூறினுர் ; போர் தவிர்ந்தது.

கோவூர்கிழார் நலங்கிள்ளியை நோக்கி, "வேந்தே ! உன்னுடன் பகைத்து நிற்பவன் யார் ? அவன் பனம் பூமாலையை அணிந்த சேர மன்னன் அல்லன். வேப்பம்பூ மாலையை அணிந்த பாண்டியனும் அல்லன். உன்னுடைய கண்ணி எவ்வாறு ஆத்திப்பூ மாலையோ, அதுவே உன் பகைவனுக நீ கருதுகின்றவனுடையது மாகும். இருவரும் ஒரே சோழர் குடியிற் பிறந்தவர்கள். எனவே உங்களில் யார் தோற்ருலும் சோழர் குடிக்கே அது இழுக்காகும். இரண்டு பேரும் வெற்றியடைந்து நும் குடிப் பெருமையைப் பாதுகாப்பது என்பது இயலாது ; அது இயற்கையுமன்று. எனவே உமது செயல் எவ்விதமும் உங்கள் குடிக்கு இழுக்குத்தருமே அல்லாமல் பெருமைதராது. கொடி கட்டிய தேர்ப் படையையுடைய நும்மைப்போன்ற மன்னர்கள் இதனை அறிந்தால் பெருமகிழ்ச்சி கொள்ளுதற்கு இச் செயல் ஏதுவாகும். எனவே, நும் குடிப் பெருமையைப் பாது காக்கவேனும் போரைத் தவிருங்கள்," என்று, குறிப் பிட்டார். கோவூர்கிழாரின் சொல்வன்மை சிறப்புடைய தாகும். இவ்விரு மன்னர்களும் தங்கள் குடிப்பிறப்பின் கண் பெருமை கொள்பவர்கள் என, அவர் உணர்ந்தார். எனவே, குடிப்பெருமையையும், குடிப்பிறப்பின் அடை

யாளமாகிய ஆத்திப்பூ மாலையையும் பற்றிக் கூறி எளிதாக அவர்கள் பகைமையைத் தவிர்த்தார்.

பழங்காலத்தில் புலவர்கள் எவ்வளவு ஒற்றுமையாக இருந்தார்களோ, அவ்வளவிற்கும் மன்னர்கள் ஒருவருக்கொருவர் பகைத்துக்கொண்டு போரிட்டு வாழ்ந்தார்கள். தமிழக வரலாற்றில் இம் மன்னர்களின் பெரும் பகைமை பெரிதாகித் தமிழகத்திற்கே ஊறு தராவண்ணம் தடுத்துக் காத்த பெருமை புலவர்கட்கு உரியதாகும். இக்காலத் தமிழ் மக்களிடம் இம் மன்னர்களிடம் காணப்பட்ட பொறுமையுணர்வும், போருணர்வுமே காண்கிறோம். குடியாட்சியில், 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்' என்பதால் தமிழ் மக்கட்கு மன்னர்களின் பண்பே வளர்ந்துவிட்டது போலும்! இந்நிலைமை மாறிப் பழந்தமிழ்ப் புலவர்களின்ஒற்றுமைப் பண்பு நம் மக்களிடம் திகழச் செய்யவேண்டும்.

## ஔவையார் தூது

பெண்பாற் புலவர்களில் தலைசிறந்து விளங்கியவர் ஔவையார். அவரது புலமையும் சொல்லாற்றலும் உலகம் உள்ள அளவும் நிலைத்து நிற்கத்தக்க புகழை அவருக்குத் தந்துள்ளன. அவரது வாழ்வில் நாம் காண்கின்ற அரியபெரிய செயல்கள் பல. அவர்பால் பெரும் பற்றுக் கொண்டவன் 'அதியமான் நெடுமானஞ்சி' என்ற, மன்னன். இவன் மழவர் என்ற வீரப்பெருங் குடிக்குத் தலைவன். இக்காலத்தில் உடல் வலிமையில் வல்லவர்களாகக் 'கூர்க்கர்'களை நாம் கருதுவதுபோல, அந்நாளில் மழவர்கள் திகழ்ந்தனர். மூவேந்தரும்

தம்முள் போர் நேருங்கால் இம் மழவர் படைத்துணையை நாடுவார்களாம். இத்தகைய வலிமிக்க குடிக்குத் தலைவன் அஞ்சி. அவனது அரிய நண்பராகிய ஔவையார், ஒருமுறை தொண்டைமானிடம் தூது சென்றார். அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் பெரும் போர் நிகழவிருந்ததைத் தடுப்பதற்கே தூது சென்றார்.

தொண்டைமான் ஔவையாரை அன்புடன் வரவேற்றான். அவனுக்கு, ஔவையார் அதியமானுக்கு வேண்டியவர் என்பது நன்றாகத் தெரியும். எனவே ஔவையாரை அழைத்துக்கொண்டு சென்று தனது 'படைக்கலக் கொட்டிலைக்' காட்டினான். அங்கே புதிது புதிதாக ஆயுதங்கள் செய்யப்பட்டு அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. போரைத் தவிர்க்குமாறு தூதுவந்த ஔவையார் நிலைமை இப்போது தருமசங்கடமாகிவிட்டது. போரைத் தவிர்க்க வந்த அவரிடம் தனது போர்ப்படைக் கலங்களைக் காட்டிப் பெருமை பேசினான் தொண்டைமான். ஔவையார் சமயமறிந்து, தமது திறமையெல்லாம் பயன்படுத்தி, தொண்டைமானைப் புகழ்வதுபோலக் கூறி, அவன் மனத்தில் உண்மை பதியுமாறு இடித்துரைத்தார். ஔவையாரின் சொல்லாற்றல் இவ்விடத்தில் வியக்கத்தக்கது!

தொண்டைமானை நோக்கி "அரசே! உனது படைக்கலங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன. நெய் பூசப்பட்டு, பீலி அணியப்பட்டு பளபள என உள்ளன. அரண்மனைக்குள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

வறியவர் சுற்றத் தலைவனாகிய, தலைமை பொருந்திய எமது அரசன் அஞ்சியின் வேற் படைகளோ கங்கும் முனையும் சிதைந்து எப்போதும் கொல்லனது உலைக் களத்தின்கண் உள்ளன,'' என்று, ஔவையார் கூறினார். ஔவையார் உட்பொருளோடு பேசுகின்றார். இக்கால இராசதந்திரிகள் எதனைப் பற்றியும் நேரிடையாகப் பேசாமல், சுற்றி வளைத்தும் உட்பொருளோடும் பேசக் காண்கின்றோம். அரசியலில் வெற்றியடைய இத் தந்திரம் மிகவும் உதவுகின்றது. ஔவையார் தலை சிறந்த, ' இராச தந்திரி 'யாகக் காட்சியளிக்கிறார். அவர் பேச்சு வெளிப்படையாகத் தொண்டைமானைப் புகழ்வது போல இருக்கிறது. ஆனால், அதியமான் அடிக்கடி போர் செய்து பழக்கமுடையவன் என்பதையும், தொண்டைமான் போர்ப் பயிற்சியே அற்றவன் என் பதையும், குறிப்பாகக் காட்டி, தொண்டைமானிடம் படைபலமும பிறபலமும் இருந்தாலும் அதியமானின் படை வலிமைக்கு முன் அவை ஆற்றா என்பதை அறி வுறுத்தி, எனவே, போரைத் தவிர்த்தலே இருதிறத் தாருக்கும் நல்லது என்பதை அவர் கூறாமல் கூறி விட்டார்.

இவ்வாறு நம்நாட்டுப் பழம் புலவர்கள் ஆற்றிய தொண்டுகள் பலவாகும். இவற்றைக் குறிப்பாகப் புறநானூற்றிலும் பிற சங்க இலக்கியங்களிலும் நாம் காண்கிறோம். ஒரு நாட்டின் அமைச்சர்களாகவும் தூதர்களாகவும் இருக்கத் தகுதியுடையவர்கள் புலவர் களே என்பது நமக்குப் புலனாகிறது. இடைக்காலத்தில் ஓர் அரசனைப் பற்றி, மற்ற அரசனிடம் தாழ்வாகக் கூறி

வெகுமதிகள் பெறவிழையும் மனப்பான்மையும் தலையெடுத்தது. ஆனால், 'மானம் சிதைந்து வாழாத,' மரபினராதலின் இத்தாழ்வு மனப்பான்மை இந்நாட்டில் நீடித்திலது. இந்நாளிலும், புலவர்களாவார், தமிழ் மக்களும் தமிழ்நாட்டு அரசும் ஒன்றுபட்டு வாழுமாறு, கட்சி சாராது அரசியல் தொண்டாற்ற முன் வர வேண்டும். அன்றே தமிழ்நாடு முன்னேறும் நல்ல நாளாகும்.

## 5. நண்பரின் பண்பு

தமிழ் நாட்டு மன்னர்களும் புலவர்களும் நண்பர்களாகத் திகழ்ந்தார்கள். நட்பு என்றால் ஏதோ தொடர்பு காட்டி அன்பு காட்டி வாழ்ந்தமை அன்று. அரசர்கள் தங்கட்குச் சமமாகவும், ஒருபடி மேலாகவும் புலவர்களைக் கருதி நட்பு பூண்டிருந்த காட்சி தமிழகத்தைத் தவிர வேறு எங்கும் காணவியலாது. ஒரு நாட்டின் செல்வத்திற்கு எல்லாம் உரிய பேரரசன், ஒன்றுமற்றுக் கலையொன்றே துணையாய் உலவும் புலவரைத் தனக்குச் சமமாக மதிப்பது விந்தை! தன்னை விட உயர்வாகவும் மதிப்பது விந்தையினும் விந்தை! தமிழகத்து நெஞ்சம் அவ்வளவு பண்பட்டிருந்தது. அதனால்தான் நமது நாகரிகம் பன்னூறாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பண்பட்ட நிலத்திலெல்லாம் நல்லநெல் விளைதல் கூடும்.

நம் நாடும் கருத்தினுல் பண்பட்டிருந்தது. புலமைப் பயிர் செழித்து வளர்ந்தது. நாகரிகம் உயர்வாக விளங்கிற்று.

## நட்பின் இலக்கணம்

நட்பு என்பது ஒன்றிய உணர்ச்சியால் உருவாவது. அடுத்த அடுத்த வீடுகளில் வசிப்பதாலோ, அடிக்கடி சந்திப்பதாலோ நட்பு உருவாவதில்லை. காலத்தைக் கடந்தும், தூரத்தைப் பொருட்படுத்தாமலும் நட்புத் தோன்றும். மனத்தொடு பொருந்தாமல் முகத்தால் மட்டும் சிரித்து நட்புக்கொள்ள முடியாது. இடுக்கண் வருங்கால், ஆடையிழந்தவன் கை அவனுக்கு உடனே சென்று உதவுவது போல, உடனே தானே சென்று உதவுவதே நட்பாகும். வெளிவேடம் அறியாமல், உயிரோடு உயிர் பிணையுமாறு அன்பால் இணைவதே நட்பாகும். நல்லவர்கள் நட்பு வளர்பிறை போல் வளரும். தீயாருடன் நட்புக் கொள்ளுதல் தீமையாய் முடியும். எனவே, ஏதேனும் கொடுத்தாவது தீயவர் நட்பை விலக்குதல் வேண்டும், நண்பர்கள் அழச் சொல்லியும் இடித்துக் கூறியும் நல்வழிப் படுத்துபவர் களாக இருக்கவேண்டும். மகிழ்ந்து பேசி உடனிருந்தே கொல்லும் நட்பைக் கனவிலும் கொள்ளுதல் கூடாது. இத்தகைய நல்ல நட்பின் செல்வர்களாகப் பழம் புலவர் பலர் திகழ்ந்தனர். அவர்களுள் சிலரது நட்பின் திறத்தை நாம் இங்குக் காண்போம்.

## பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனும்

பிசிராந்தையார் பாண்டிய நாட்டில் பிறந்து வளர்ந்த புலவர். பிசிர் என்பது அவரது ஊர். ‘ஆதன்

தந்தை' என்ற அவர் பெயர், 'ஆந்தை' என மருவிற்று, என்பர். இப் பிசிராந்தையாரும் சோழமன்னனும் ஒருவரை ஒருவர் காணுமலே பெருநட்புக் கொண்டனர். ஒன்றிய உணர்ச்சியிருந்ததால் ஒருவரைப்பற்றி ஒருவர் கேள்விப்பட்ட அளவில் இவர்கள் நட்புப் பூண்டனர்.

கோப்பெருஞ் சோழனுக்கும் அவன் மக்களுக்கும் பகைமை ஏற்பட்டது. புல்லாற்றூர் எயிற்றியனுர் என்ற புலவர் இடை நின்று அறிவுரை கூறிப் போரை விலக்கினுர். ஆனுல், மனம் உடைந்த கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான். வடக் கிருத்தலாவது, ஆற்றிடைக்குறை போலும் தனி யிடத்தில் வடக்கு நோக்கி உணவுண்ணுமலிருந்து கடவுட் சிந்தையராய் உயிர்விடுதலாகும். கோப்பெருஞ் சோழ னுடன் புலவர் பலர் வடக்கிருந்தனர். இவ்வாறு வடக் கிருக்கத் தொடங்கிய காலத்தில், "பாண்டிய நாட்டி லிருந்து என் நண்பர் பிசிராந்தையார் வருவார். அவருக்கும் ஓரிடம் ஒதுக்கிவையுங்கள்," என்று, கோப்பெருஞ்சோழன் குறிப்பிட்டான். பிசிராந்தையார் இச்சோழன்பால் பேரன்பு உடையவர். யாரேனும் தம் பெயரை வினவினுல், இப் புலவர் பெருமான் 'கோப்பெருஞ் சோழன்' எனத் தன் நண்பர் பெயரையே தம் பெயராகக் கூறுவாராம்! அவ்வளவு ஈடுபாடு. எனவே, வடக்கிருக்கத் தொடங்கியபோது கோப்பெருஞ் சோழன், "பிசிராந்தையார் இதுவரையும் இவ்வரசனைப் பற்றிக் கேட்டறிந்த அவ்வளவே அல்லாமல் கண்டு பழகியவரல்லர். எனவே, இப்போது வருதல் அரிது என்று எண்ணுதீர்கள். பிசிராந்தையார் என்பால்

சிறிதும் இகழ்வில்லாதவர். இனிய பண்புகளை உடையவர் ; உயிர் ஒன்றிய பேரன்புடையவர் ; புகழ் அழியுமாறு ஒரு பொய்கூடப் புகல விரும்பாதவர். அத்தகையவர் யான் வாழ்ந்திருந்த காலத்து வராதிருந் தாலும், யான் இன்னலுற்ற இக்காலத்து வாராதிரார்" என்றான். பிசிராந்தையாரும் அரசன் கூறியாங்கு அங்கு வந்து, வடக்கிருப்பாராயினர். இதுகண்ட சான்றோர் பெரிதும் வியப்புற்றனர்.

"இத்தகைய நட்பாளரை நாம் இதுவரையும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. கண்ணுற் கண்டு ஒருவரோடு ஒருவர் பழகியமை சிறிதும் இல்லாமலே, கேள்விப்பட்ட அளவானே இவ்வளவு நட்புடையவராக இருப்பார்களென நினைக்கவும் இயலவில்லை. இவ் வரசனும் பிசிராந்தையாரை ஒருநாளும் அண்டிலன். கேள்விப்பட்டுப் பழகிய அளவிலேயே 'இந்நேரத்தில் பிசிராந்தையார் ஈண்டு வருதல் ஒருதலை," என்று, அரசன் உறுதியாகக் கூறினான். அவன் உறுதி பழுதாகாமல் பிசிராந்தையாரும் வந்து சேர்ந்தார். அரசனது உறுதியும், புலவரது குணநலமும், நினைக்க நினைக்க அளவு கடந்த வியப்பைத் தருகின்றன ! "தன் ஆட்சிக்குட்படாத நாட்டில் வாழ்ந்த சான்றோருடைய உள்ளத்தைத் தனது குணச் சிறப்பால் கவர்ந்திருந்த இவ்வரசனை இழக்கின்ற இவ்வுலகம் இனி என்ன நிலைமையை அடையுமோ !" என்று, அன்று அருகிருந்த சான்றோர் வியந்தனர். நாமும் இந்நட்பின் திறங்கண்டு வியந்து, இன்றும் போற்றுகிறோம்.

## ஔவையாரும் அதியமானும்

அதியமான் நெடுமானஞ்சி ஔவையாரிடம் பெறும் ப்ற்றுக்கொண்டிருந்தான். அவரைப் பிரிய மனமில்லாமல் அவன் பரிசில் நல்கக் காலந்தாழ்த்ததும் உண்டு. ஔவையார் தன்னைவிட நெடுநாள் வாழவேண்டுமென, மனதார விரும்பி, நீண்ட நாள் வாழ்வைத் தருவதாகக் கருதப்பட்ட நெல்லிக்கனியொன்றை, ஔவையாரிடம் தந்து உண்ணச் செய்தான்.

இத்தகைய பெரும் பண்பு நலன் வாய்த்த அஞ்சி ஏழு வள்ளல்களுள் ஒருவன். இவனது தலைநகர் ' தகடூர் ! அவ்வூரைத் தலைநகராகக் கொண்ட ஆண்ட இவனது நாட்டில் குதிரைமலை என்பது சிறப்புடையமலை. ' அதியமான் ' என்றும், ' அஞ்சி ' என்றும், ' அதிகன் ' என்றும் இவன் பலவாறு அழைக்கப்பட்டான். இவனது மகன்பெயர் ' பொகுட்டெழினி '.

ஔவையார் இவனது வீரம், வண்மை, பெருமை அனைத்தையும் புகழ்ந்து பாடியுள்ளார், ஒரு நாளல்ல, இரு நாளல்ல, பலநாள் சென்றாலும் பலருடன் சென்றாலும். தலை நாள் போல மனமுவந்து நல்கும் கொடையாளன் என அவர் அஞ்சியைக்கூறியுள்ளார். யானை தன் கொம்புகட்கு இடையே வைத்த கவள உணவு தப்பாமல் அதற்கு இரையாவது போல, அஞ்சியைப் பாடிச் செல்லும் புலவர்கள் பரிசில் பெறுதற்குக் காலம் நீட்டித்தாலும் அவர்கள் பரிசில் பெறுவது தப்பாது என்று குறிப்பிட்டுள்ளார். அதியமானுக்காகத் தொண்டை நாட்டு அரசனிடம் தூது சென்றார், அதியமானுடைய

வீரத் திறத்தை அவர் பல இடங்களில் எடுத்துக் காட்டினர்.

ஒரு முறை பகைவர்களைப்பார்த்து அவர் அஞ்சியின் வலிமையை விளக்கிக் கூறிய அருமை வியந்து போற்று தற்குறியதாகும். “பகைவர்களே! அதியமான் அஞ்சி யோடு பகைமை கொண்டு போர் செய்தலைத் தவிருங்கள். அதியமான் மிக வலிமை உடையவன். ஒரு நாளில் எட்டுத் தேர்களைச் செய்து முடிக்கவல்ல தச்சன் ஒருவன், பலவாறு நன்கு சிந்தித்து ஒரு மாத காலத்தில் ஒரு சக்கரம் மட்டும் செய்து முடித்தால் அச்சக்கரம் எத்தகைய வலிமை உடையதாக இருக்குமோ, அத்தகைய வலிமையும் விரைவும் உடையவன்” என்று அஞ்சியின் வலிமையை அவர் விளக்கும் அருமை அறிந்து இன்புற்றபாலது.

வாழ்நாளெல்லாம் அமைச்சர்போலவும் தூதர் போலவும், நண்பராகவும் அஞ்சியுடன் இணைபிரியாது வாழ்ந்த ஔவையார், அவன் இறந்த காலத்துப் பெருந் துன்பத்திற்கு ஆளானர். இணைபிரியா உயிர் நண்பரை இழந்தார்க்குப் பிறக்கும் இரக்கத்தின் உச்சநிலையை அவர் அப்போது பாடிய கையறு நிலைப்பாடலில் காண்கிறோம்.

சேரமான் பெருஞ் சேரலிரும்பொறை அதியமானை வென்று தகடூரை அழித்தனன். இப்போரில் சோழ, பாண்டிய மன்னர்களும் அதியமானுக்குத் துணையாக வந்து போரில் தோற்றனர் என்று கருதப்படுகிறது.

அதியமான் மார்பில் வேற்படையைத் தாங்கி வீரனாக உயிர் நீத்தான். இக்காட்சி ஔவையார் மனக்கண்களை விட்டு அகலவில்லை. அவர் "அதியமானுடைய மார்பில் தைத்த வேல் பாணர்தம் கையிலுள்ள பாத்திரங்களைத் துளைத்துச் சென்றது; இரந்து பொருள் பெறுவார் கைகளையும் துளைத்துச் சென்றது; அதியமானால் காப்பாற்றப்பட்ட சுற்றத்தாரின் கண்பார்வையின் ஒளி மழுங்குமாறு செய்தது; அழகிய சொற்களை ஆராய்ந்து பாடும் புலவர் நாவிலே சென்று தைத்தது; இனிப் பாடுவாரும் இல்லை; பாடுகின்றவர்கட்கு ஈவாரும் இல்லை; குளத்திலுள்ள தேன் பொருந்திய அழகிய மலர் சூடுவாரின்றி வீணே அழிவதுபோல, பிறர்க்கு ஒன்றும் கொடாமையினால் பிறரால் பாராட்டப் பெறாமல் இறப்போரே இவ்வுலகத்துப் பலராவர்" என்று வருந்திக் கூறினார்.

இவ்வாறு பழங்கால மன்னர்களும், புலவர்களும் உயிர் நண்பர்களாகத் திகழ்ந்தார்கள். இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றுபட்டு உயர்வு தாழ்வு கருதாமல் அவர்கள் வாழ்ந்த அருமை இன்று நாம் கடைப்பிடித்தற்குரிய செயலாகும். நட்பின் சிறப்பினைத்தையும் அவர்கள் வாழ்வை அறிவதன்மூலம் நாம் விளங்கிக் கொள்ள முடியும். அவர்கள் பெருந்தன்மையால் 'நட்பு' எனும் பண்பே சிறப்புற்றது என்று கூறலாம்.

### கபிலரும் பாரியும்

வேள்பாரி கடை எழு வள்ளல்களுள் ஒருவன். பறம்பு மலையை உடைய பறம்பு நாட்டை ஆண்டவன்.

இப்பறம்பு மலை இக்காலத்துப் ‘ பிரான்மலை ’ என மருவி வழங்குகின்றது. இது இன்று இராமனாதபுர மாவட்டம் திருப்பத்தூர் கூற்றத்தில் (தாலுகா) உள்ளது. குன்றக் குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் ஐந்து ‘ தேவஸ் தானங்களில் ’ பிரான்மலையும் ஒன்றாகத் திகழ்கிறது. அங்கு ஆண்டுதோறும் பாரிவிழாக் கொண்டாடி வரு கிறார்கள். பழங்காலத்தில் இப்புறம்புமலை மிகுந்த வளமுடையதாகத் திகழ்ந்தது. அங்கு மக்கள் யாரும் உழைக்காமலும் பயிரிடாமலும் பெறும் பயனடையும் வண்ணம், அம்மலை தானாகவே வளந்தந்து வாழ்வித்தது எனத் தமிழ் நூல்கள் புகழ்கின்றன. பாரியின் கொடைத் திறம் போலவே பறம்புமலையின் சுனைநீரும் பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்தது. பறம்பு மலையை நீலநிற வானத் திற்கும், அம்மலையில் திகழும் சுனைகளை வானத்து மீன்களுக்கும் ஒப்பிட்டுப் பழம்புலவர் பாடியுள்ளனர். அதன் குளிர்ச்சியும் இனிமையும் பலபடப் பாராட்டி உரைக்கப் பெறுகிறது. புலவர்கள், பாரியின் கொடைத் திறத்தால் உளம்மகிழ்ந்து அச்சுனை நீரைப் பருகியிருக் கின்றார்கள். அதனால் அத் தண்ணீர் இனிமை மிகுந்த தாக அவர்களுக்குச் சுவை நல்கியிருக்கிறது என்று நாம் கருதலாம் !

அப்பறம்புமலையில் மூங்கில், நெல், பலாப்பழம், வள்ளிக்கிழங்கு, தேன் முதலியன வற்றாத உணவுச் செல்வங்களாகும். சோலைகளில் மயில்கள் ஆட, பெரிய மலைச் சிகரங்களில்குரங்குகள் தாவி விளையாட, குயில்கள் இசை பாட, இயற்கை அழகு பொலிய அம்மலைக் காட்சி இனியதாயிருக்கும். நிலவளம், மழைவளம், தொழில்

வளம் மிக்கது அந்நாடு. புன்செய்ப் பயிர்களாகிய வரகு, தினை, எள், அவரை முதலிய பொருள்கள் அங்கு மிகுதி யாக விளைந்தன. இத்தகைய வளமான நாட்டை ஆண்ட பாரியின் கொடைத் தன்மை ஒப்பற்றதாக விளங்கியது !

## முல்லைக்குத் தேர்

பாரியின் வள்ளல் தன்மைக்கு எல்லை காட்டுவது, அவன் முல்லைக்கொடிக்குத் தன் பொற்றேரை ஈந்த காட்சியேயாகும். வழியில் படருதற்குக் கொழு கொம் பின்றிக் கிடந்த முல்லைக் கொடியைக் கண்டதும் அவன் மனம் இரக்கம் கொண்டது. ‘ காக்கை குருவி எங்கள் சாதி ’ என்று பாடும் அருள் உள்ளமன்றோ அவன் உள்ளம். உலகத்து உயிர்களும் பயிர்களும் அனைத்தும் அவனுக்கு அருட்சாட்சியாகத் திகழ்ந்தது. தன்னைப் போன்ற மனிதன் ஒருவன் அல்லற் படுவதைக்கண்டும் கவனியாது செல்லும் இன்றைய மனிதன், முல்லைக்குத் தேரீந்த பாரியை நினைத்துச் சிரிக்கத்தான் செய்வான். இன்று நமது நாகரிகமெல்லாம் ஏட்டோடு இருக்கிறது. நடை முறையில் நாம் நமது நாகரிகப் பேச்சுகளைக் கடைப்பிடிப்பது என்றால், இன்றைய நாகரிகப் பூச்சுகள் பல சாயம் வெளுத்துவிடும். கண்மூடி வாழ்வே இன் றைக்கு ஏற்றதாகிவிட்டது. நாம் நடந்து செல்லும், இன்றைய நாகரிகம் படர்ந்த நகரத்தின் தெருவிலே, எத்தனை பிச்சைக்காரர்களைக் காண்கிறோம். பாரியின் ஈரமனம் நம்மிடம் நடைமுறைக்கு வருமானால், நாம் வீட்டிற்குத் திரும்ப முடியாது. உலகத்தின் நோய், அழுக்கு, துன்பம் அவ்வளவு நிறைந்துகிடக்கிறது, நம் கண்முன் நடக்கிறது. நாம் அரசியல் தலைவர்களாக

விருந்தாலும், நாட்டின் செல்வர்களாக இருந்தாலும் புரட்சி வீரர்களாக இருந்தாலும்செய்யக்கூடியது என்ன? அல்லது செய்வதுதான் என்ன! அந்த நேரத்தில் கண்ணை மூடிக்கொண்டு, உலகத் துன்பங்களை—அது நம்மை அடையாத வரையில் புறக்கணித்து விடுகிறோம். பிறகு அழகிய மாளிகையிலே, மின்சாரக் கருவிகள் பணியாற்ற, மெத்தைமேல் இருந்துகொண்டு திட்டங்கள் தீட்டுகிறோம்; கட்டுரைகள் எழுதுகிறோம்; கதைகள் புனைகிறோம்; கவிதைகள், காவியங்கள் உருவாக்கு கிறோம்! எதற்கு? உலகத்து நோயைப் போக்க, துன்பம் துடைக்க!

குடியாட்சி முறையும் மனித இன வளர்ச்சியும் சேர்ந்து எப் பிரச்சினையையும் நேரே கவனியாமல், கடவுளைப்போல் இருந்துகொண்டு, மறைமுகமாக நோக்கி நோய் தீர்க்கும் காட்சியே இன்றைய சமுதாயத்தில் நாம் காண்பது. இச்சமுதாயத்திலே சிக்கிக் கிடக்கும் நமக்குப் புத்தரின் அருள் புரியாது; பாரியின் கொடை விளங் காது, பேகனின் வண்மை தவருகவும் படும்! தாய் தன் குழந்தையிடம் காட்டும் பரிவுபோல உலகத்துயர்களையும் பேரரசர்கள் கனிவுடன் விளங்கிய காலம் அது. அதனுல் முல்லைக்குத் தேர் ஈந்த பாரியின் செயல் அன்று நன்கு மதிக்கப்பட்டது.

**மூவேந்தருடன் போர்**

> ''கொடுக்கிலாதானைப் பாரியே என்று
> கூறினும் கொடுப்பாரிலை''

என்று சுந்தரர் பாரியைப் பிற்காலத்தில் புகழ்ந்து பாடினுர். பாரி முல்லைக்குத் தேரீந்ததோடு மட்டும் நின்றிருந்தால், அது அவன் புகழுக்காகச் செய்தது என

நாம் புறக்கணித்துவிடலாம். ஆனால் தன் பறம்பு மலையைச் சார்ந்த முந்நூறு ஊர்களையுமே பரிசிலர்க்கு வழங்கிவிட்டான்! இதனால், "நிழல் தருவதற்கு மரங்களேயில்லாத நீண்டதொரு வழியில், தனி ஒரு பெரிய மரம் நின்று போவார் வருவார்க்கெல்லாம் நிழல் தருவதுபோல பாரி வறியவர்க்கு ஈந்து வாழ்ந்தான். அக்காலத்து வாழ்ந்த மூவேந்தர்களையும் மிஞ்சி, பரிசிலர்க்கு வரையாது வாரி வழங்கினான்," என்று புகழ் பெற்றான். அவனது புகழ்ப் பெருக்கைக் கண்ட மூவேந்தரும் பொறாமை கொண்டனர். பேரரசர்கள் தாமிருக்க, ஒரு குறுநில மன்னன் இவ்வளவு புகழ் பெறுவதா என அவர்கள் நெஞ்சம் துடித்தது. இதனால் மூவேந்தரும் பாரிமீது போர் தொடுத்தனர். சில ஆராய்ச்சியாளர் பாரி வள்ளல் தன் மகளிரை மூவேந் தரில் யாரோ ஒரு வேந்தனுக்கு மணம்செய்து கொடுக்க மறுத்ததாலேயே இப்போர் தொடங்கிற்று எனக் கூறு கின்றனர். பொறாமை கொண்ட மூவேந்தர் இச் சிறு நிகழ்ச்சியொன்றைத் தாமே உண்டாக்கிக் காரணமாகக் காட்டிப் போர் தொடுத்திருக்கலாம். கபிலர் மிகச் சிறந்த சங்கப் புலவர். அவர் பாரியினுடன் வாழ்ந்தார். எந்நேரமும் இணைபிரியாது இருந்தார். அவர் பாரிக்கு அமைச்சராக இருந்தாரா? படைத் தளபதியாக இருந் தாரா? கணமும் இணைபிரியா உயிர் நண்பராக இருந்தாரா? உறவினராக இருந்தாரா? என நாம் வினவினால், அவர் முற்கூறிய அனைவராகவும் இருந்தார் என்றே பதில் கிடைக்கிறது.

பழம் புலவரிடத்துக் காணும் பெருமைக்கு ஒரு சிறு உதாரணம் காட்டலாம். பொதுவாக நண்பருலகில்

ஒரு நிகழ்ச்சியுண்டு. ஒருவனிடம் செல்வமெல்லாம் இருக்கும்போது நண்பர்களாக இருப்பார்கள். செல்வம் கரையக்கரைய நட்பும் கரையும். செல்வம் மறையும் போது நண்பரும் மறைந்துவிடுவார்கள். பிறகு, யாரிடம் செல்வம் சேருகிறதோ அவனிடம் நட்புப் பிடிப்பார்கள். பெரும்பான்மையும் இதுதான் உலக வழக்கமாக இருக் கிறது. இவர்கட்கு இடையே ஒன்றிரண்டு நல்ல நண்பர் களையும் காண்கிறோம். கோப்பெருஞ்சோழர் நன்றாக வாழும்போது பிசிராந்தையார் சென்றிருந்தால் எவ் வளவோ பரிசில்கள் கிடைத்திருக்கும். ஆனால் அவன் மனமுடைந்து வடக்கிருக்கும்போது அவர் சென்றார். 'செல்வம் பொருந்திய காலத்து என்னைக் காணவிட்டா லும், அல்லற்படும் காலத்து என் நண்பர் வாராதிரார்,' எனச் சோழன் கூறியதைப் பிசிராந்தையார் மெய்ப்பித் தது கண்டோம். அதியமான் நெடுமானஞ்சி இறக்கும் வரை உடனிருந்து, அவன் இறந்த பிறகும் அவனையே நினைந்துருகிப் பாடினார் ஔவையார். கபிலரும் பாரி வள்ளல் செல்வங் கொழித்து வாழும் நாட்களிலே நட்புக் கொண்டார். ஆனால், பிறகு மூவேந்தர் படையும் துன்பங்களும் பாரிக்கு அடுத்தடுத்து வந்தன. அந் நாளெல்லாம் பாரியைப் பிரியாமல் உடனிருந்து மூவேந்த ருடனும் பிறரிடத்தும் பாரிக்காக வாதாடினார் கபிலர். உண்மை நட்பின் பண்பை அவரிடம் முழுமையும் காண்கிறோம்.

### கபிலரின் வீரம்

மூவேந்தர் படைபலம் மிக்கவர், பாரியோ சிற்றரசன். இந்நிலையில் பாரிக்காகப் பரிந்து பேசுவது ஆபத்து.

அதுவும் மூவேந்தரிடமே சென்று பாரியை ஆதரித்துப் பேசுவது மிகவும் பயங்கரமானது. அம் மூவேந்தரையும் மதியாமலும் பேசுவதென்பது யார்க்கும் இயலாத செயல். கபிலர் பாரியின்பால் தாம்கொண்ட அன்பால், மூவேந்தரும் வந்து பறம்பு மலையை முற்றுகையிட்ட காலத்தே, பாரியின் சிறப்புக்களை அவர்கட்கு அஞ்சாமல் எடுத்துரைத்தார்.

"மூவேந்தர்களே! உங்களிடம் பெரிய அளவில் நால்வகைப் படைகளும் இருந்தாலும், நீங்கள் மூவரும் ஒன்று சேர்ந்து பாரியை வெல்லுதல் இயலாது, பாணர்கள், பொருநர்களைப் போல ஆடல் பாடல்களில் வன்மையுடையீராய், உங்கள் மனைவியர் விறலியர் போல உங்களைப் பின் தொடர்ந்துவர நீவிர் பாரியிடம் சென்றால் அவன் தன் நாட்டையும் மலையையும் ஒருங்கே உங்கட்கு அளிக்கக் கூடும்," என்று கூறினார் கபிலர். போர் செய்யப் புறப்பட்டுள்ள மூவேந்தர்களைப் பாணர்களைப் போல ஆடிப்பாடி வந்தால் வெற்றியடையலாம் என்று எதிர்த்துக் கூறுதற்கு எவ்வளவு மனவலிமை வேண்டும்! அன்பு எப்போதும் மென்மையானது என்று கூறுகின்றார்கள். சில சமயங்களில் அன்பைப் போல வன்மையானதும் இல்லையென ஆகின்றது. பாரியை வீரத்தால் வெல்ல முடியாது; அவன் மன ஈரத்தைப் பயன் படுத்தினால் அவனை வென்று விடலாம் என்பது, கபிலர் கருத்து.

**" ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன்**
**விற்றுக்கோள் தக்க(து) உடைத்து "**

என்பது திருக்குறள். ஒருவன் பிறர்க்கு உபகாரம்

செய்து வாழ்வதனால் கேடு வருமென்றால் அக்கேடு, தன்னை விற்றுவது அவனால் அடையத்தக்கதாகும் என்று வள்ளுவர் கருதுகிறார். பாரியின் வாழ்வில் இப்பண்பைக் காண்கிறோம், அதனைக் கபிலர் தம் 'நுண்மாண் நுழை புலத்தால் நன்கு தெளிவு படுத்துகிறார்.

மூவேந்தர்களால் எளிதில் பாரியை வெல்ல முடிய வில்லை. முற்றுகைக் காலம் நீடித்தது. இதனால் வளங் குன்றாத மலையிலும் வளஞ்சுருங்கிற்று. உடனே கபிலர் கிளிகள், பறவைகளைப் பழக்கி அவற்றைப் பறக்க விட்டு நெற்கதிர் முதலியவற்றைக் கொண்டு வரும்படி செய்து நாட்டினுள் இருந்த மக்கட்கு உதவி செய்தார். இச் செய்தியை அகநானூற்றுக் கவிதைகளில் ஔவையார், நக்கீரர் அனைய பெரும் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். வரலாற்றில் இத்தகைய நிகழ்ச்சி மிக அருமையாகும். கிளிகள் பறவைகளைப் பழக்கியதால் பெரும் பயன் விளைந்திருக்கும் என, நாம் கருத முடியாது. மக்கட்குத் தேவைப்படும் அளவு தானியங்களை அவைகள் கொத்திக் கொணர முடியுமா என்பது ஐயத்திற்கிடமானது. ஆனால், இந்நிகழ்ச்சி முயற்சியின் அருமையைக் காட்டு கிறது. மூவேந்தரும் ஒன்று கூடி முற்றுகையிடத்தான் முடிந்தது; மலையை அணுக முடியவில்லை. மலைவாழ் மக்கட்கு உணவு தரப் பறவைகளைப் பழக்கி அனுப்பும் காட்சி, பிறருக்கு அடிபணிய மறுத்து வீரத்தோடு பெருமிதமாகப் பாரியும் கபிலரும் நம் முன் தோன்றும் காட்சியாக இருக்கிறது! தன்னிகரற்று வான் நோக்கித் தலை நிமிர்ந்து நிற்கும் இப் பறம்பு மலைக் காட்சி, பாரியின் புகழ்போல நிலைத்து நிற்கிறது.

மீண்டும் ஒரு முறை கபிலர் மூவேந்தர்களையும் பார்த்துக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்: "எதிரே நின்று போர் புரிந்து பகைவரை வெல்லும் நீங்கள் மூன்று பேரும் கூடிப் போர் செய்தாலும் பாரியின் பறம்பைக் கொள்ளுதல் இயலாது. பறம்பு நாடு முந்நூறு ஊர்களையுடையது. முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பெற்றனர். யானும் பாரியுமே மிஞ்சியிருக்கின்றோம்; பறம்பு மலையும் உளது. நீவிர் போர் செய்யும் இம்முயற்சியைக் கைவிட்டுப் பாடிக்கொண்டு இரவலராகச் சென்றால், பறம்பு மலையைப்பெறலாம். அன்றியும், இரவலர்கள் பாரியிடம் சென்று அவனையே பரிசிலாக வேண்டுமெனக் கேட்டால் மறுக்காமல் தன்னையே கொடுத்து விடுவான்!"

முதன்முறை மூவேந்தரும் படையெடுத்தபோது அவர்கள் வெற்றிபெற முடியாமல் திரும்பியதாக அறிகிறோம். அப்போது கபிலர் மூவேந்தர்களிடம், 'பாணர்களைப் போல் பாடிச்சென்றால் நாட்டையும் மலையையும் பெறலாம்' என்று கூறினர். ஆனால், மூவேந்தரும் அவர் சொல்லை மதியாமல் போரிட்டுத் தோற்றுத் திரும்பினர். பாரி, "தன்னை எதிர்த்துவந்த பகைவர் தோற்று ஓடும்போது அவர் வீரக்கழலால் உண்டாகும் ஆரவாரத்தைக்கேட்டு, தோற்றோடும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று போரிடுவது அறம் ஆகாது என எண்ணி, அவர்கள் ஓடுவதைப் பார்த்துக் கொண்டு நின்றான்," என்று புகழப்படுகிறான்.

மறு முறை, கபிலர் மூவேந்தரிடம் பேசும்பொழுது, முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பெற்றனர் என்றும்

மலேயே மிஞ்சி யுள்ளது என்றும் கூறுகின்ருர். இதிலிருந்து இவ்விரு போர் நிகழ்ச்சிகட்குமிடையே தான் முந்நூறு ஊர்களேயும் பரிசிலர்க்கு பாரி வழங்கி விட்டான் என அறிகிறோம். இதனைக் கேள்விப்பட்ட மூவேந்தர் பெரிதும் சினமுற்றிருப்பர். இறுதியில் பாரியின் முடிவு தெளிவாகத் தெரியவில்லே. மூவேந்தரும் வஞ்சகமாகக் கொன்றனரா, அல்லது பாரியே மக்கள் படும் அவதியைக் காணப் பொருமல் நேரே மீண்டும் எதிர்த்துக் கடும் போர் செய்து வீர மரணம் எய்தினனு என அறிய முடியவில்லே. ஆனுல் பாரி மகளிர், "முந்திய முழுவெண்ணிலவு நாளில் எம் தந்தையும் எம்முடனிருந்தார், எம் குன்றையும் பிறர் கொள்ள வில்லே. இந்த முழு நிலவு நாளிலே எம் குன்றையும் பிறர் கொண்டார். நாங்கள் தந்தையை இழந்து விட்டோம்," என வருந்தி யுரைக்கக் காண்கிறோம். இவர்கள் கூற்றி லிருந்து பறம்பு மலேயைப் பிறர் கைப்பற்றியமையையும் பாரி இறந்ததையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

பாரியுடன் வாழ்ந்த கபிலர், அவனேச் சார்ந்து நின்று மூவேந்தரையும் எதிர்த்து நின்ற காட்சி, நட்பின் சிறப்பை மிகுதிப்படுத்துகிறது. உண்மையான நண்பர்கள் துன்பம் வருங்காலத்து 'உடுக்கை இழந்தவன் கைபோல' உடனே உதவுவார்கள் என்பதைக் கபிலரிடம், காண்கிறோம். பாரி கபிலர் நட்பு இணையற்றது, என்றும் மறையாது நின்று வழி காட்டக் கூடியது அன்ருே !

**பேகனின் நண்பர்கள்**

நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக் கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு

...ERSITY EXTENSION L...

என்று வள்ளுவம் கூறுகின்றது. நட்பு என்பது மகிழ்ச்சியாகச் சிரித்துப் பேசுவதற்கு மட்டும் ஏற்பட்டதன்று. நண்பரிடம் தவறு கண்டால், கடிந்து கூறியேனும், இடித்துரைத்தேனும் திருத்த வேண்டும். அத்தகைய நட்பே பயன் தருவதாகும். வையாவிக் கோப்பெரும் பேகன் பல புலவர் நண்பர்களை உடையவனாகத் திகழ்ந்தான். கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் எனப் பெரும் புலவர்களே அவனது நண்பர்களாக விளங்கினர். இவர்கள் தமது நட்புரிமையால் பேகனைத் திருத்தி, அவனது குடும்ப வாழ்வைச் செம்மைப் படுத்தினார்கள். நட்பின் இலக்கணத்தை மெய்ப்பித்தார்கள்.

வையாவிக் கோப்பெரும்பேகன் ஆவியர் குடித் தலைவன். கடையெழு வள்ளல்களில் ஒருவன். பாரி, காரி, ஆய், அதியமான். நள்ளி, ஓரி, பேகன் என்பவர் கடையெழு வள்ளல்களாவர், குளிரால் நடுங்கி, மயில் அகவியதைக் கேட்டு, அது துன்புற்றதாக எண்ணித் தன் போர்வையை அதற்குத் தந்து வந்தான் பேகன். இவ்வாறு ஆராயாது பெருங்கருணையால் கொடுக்கும் கொடையைக் 'கொடை மடம்' என்பர் தமிழ் நூலோர். இத்தகைய கொடை மடம் பட்ட பேகன் எக்காரணத்தாலோ தன் மனைவியைப் பிரிந்து, மற்றொருத்தியுடன் வாழ்ந்து வந்தான்.

பேகனின் மனைவியின் பெயர் கண்ணகி. கண்ணகி என்ற பெயருடையவர்களே கணவனைப் பிரிந்து துன்புறுவர் போலும்! கோவலன் மாதவியை அடைந்து கண்ணகியைக் கைவிட்டது போலவே, பேகனும் தன்

மனைவியாம் கண்ணகியைப் பிரிந்து மற்றொருத்தியுடன் வாழ்ந்து வந்தான். இவளும் இளமை நலமும் அழகுப் பொலிவும் உடையவளே. பெருமிதத் தோற்றமும் கற்பும் மிக்கவளே. இருந்தும் பேகனின் மனம் ஏதோ காரணத்தால் பிறழ்ந்தது; அவன் அறநெறி மறந்து வாழ்ந்தான். புலவர்கள் அக்கால அரசர்களுடன் சமமாக நண்பர்கள் போல வாழ்ந்ததால், பேகனிடம் சென்று நிலைமையை விளக்கி அவனை நல்வழிப்படுத்தினர். கபிலர் என்ற புலவர் முதலில் பேகனிடம் சென்றார். அவருக்கு ஒரு அச்சம் இருந்தது. எவ்வளவு பெரிய நண்பர்களாயினும் குடும்ப விவகாரங்களில் தலையிடுதலைச் சிலர் விரும்பார். பேகனோ அரசன். அவனது குடும்பச் சண்டையில் தலையிட்டால், அது அவனுக்குப் பெருங் கோபத்தை உண்டுபண்ணக் கூடுமல்லவா? எனவே அவர் மிகவும் சிந்தித்து, புதியதோர் வழியிலே அவனைத் திருத்த முற்பட்டார்.

“கொடைத் தன்மை மிக்க பேகனே! விரைந்து செல்லும் குதிரைகளை உடையவனே! நேற்றுக் காடுகளெல்லாம் கடந்து நடந்து வந்த என் சுற்றத்தார் பசித்து வருந்தினராக, முரசொலிபோல அருவி ஒலி செய்யும் மலைச்சாரலிலே இருக்கின்ற நின் சிற்றூரின்கண் சென்று உன் வாயிலில் நின்று—நீ இருப்பாய் என நினைத்து—உன்னையும் உன் மலையையும் பாடினேன். அது கேட்டு ஒரு பெண் குழல் ஒலிப்பது போலப் பெரிதும், அழுது கொட்டுகின்ற கண்ணீரினை நிறுத்த முடியாதவளாக வருந்தினாள். அவள் யாரோ? மிகவும் இரங்கத் தக்கவள்!” என்று கபிலர் குறிப்பிட்டார். உன் மனைவி

அழுகின்றாள்; நீ அவளைச் சென்று சேர்க என்று கூறவில்லை. யாரோ ஒரு இளம் பெண் அழுகின்றாள், அவளைப் பார்த்தால் மிகவும் இரக்கவுணர்வு உண்டாகிறது என்று தமக்கு ஒன்றும் தெரியாதவர்போல் குறிப்பிடுகிறார். 'உன் வாயிலிலே நின்று பாடினேன்' என்பதால் அவள் பேகன் மனைவியே என்பதையும் நினைப்பூட்டுகிறார். புலவர் அரசனைத் திருத்துகிற முறையிலேதான் எத்துணை நாகரிகம்! பண்பாடு! புலவரின் நட்பின் திறத்தினை வியப்பதா? அவரது திருத்தும் பண்பினை வியப்பதா? என, நமக்குத் திகைப்பு உண்டாகிறது!

பேகனைத் திருத்துவதற்கு, பரணர் என்ற புலவரும் முற்பட்டார். அவர் கபிலர் சென்று மீண்ட செய்தியைக் கேள்விப்பட்டிருப்பாராதலின், கபிலரினும் வெளிப்படையாகவே கூறிப் பேகனுக்கு அறிவுரை கூறுகின்றார். இப்புலவர் பெருமக்கள் பிழையைத் திருத்தும் முறைகளை நாம் காணுங்கால், பிழையால் நிகழும் துன்பத்தையே நாம் மறந்துவிடுகிறோம். நம் வாழ்விலும் சரி, மனித இனப் பொது வாழ்விலும் சரி பிழைகள் நேர்வது இயற்கை. 'பிழை புரிவது மனித இயல்பு' என்பர். ஆனால், நண்பர் என்போர் இப் பிழை மாற்றும் அரு மருந்தாவர். எனவே, ஒவ்வொரு மனிதனுக்கும் நண்பர்கள்—நல்ல நண்பர்கள்—இன்றியமையாது வேண்டப்பெறுகின்றனர். மனைவியைப் பிரிந்துள்ள பேகனைப்பார்த்துப் பரணர்,

"நாங்கள் உன் வீட்டின் வாயிலிலே சென்று செவ்வழிப் பண்ணை யாழிலே மீட்டி இசைத்துக்கொண்டு

நின்றேம். அப்போது நெய்தல் மலர்போலும் மை தீட்டியகண்களில் நீர் சொரிய, அணிகலன்கள் நனையுமாறு ஓயாது அழுதுகொண்டிருந்தாள் ஒரு பெண். உடனே நாங்கள், "இளமை பொருந்திய அம்மையே! நீர் எம்மால் விரும்பிப் பாடப்படுகின்ற பேகனுக்கு உறவோ?" என்று கேட்டோம். அந்த அம்மையார் தமது காந்தள் மலர் போன்ற அழகிய விரலால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "யாம் அவருக்கு உறவினர் அல்லேம்; எம்மைப்போல வேருெருத்தியின் அழகை நச்சி, அவர் வாழ்ந்து வருகிருராம்" என்று குறிப்பிட்டார், என்று கூறுகின்ருர். இதனை மனங்கொள்ளாமல் பேகன் பரணர்க்குப் பொன்னும் பொருளும் பரிசிலாகக் கொடுத்தான். அவர் இப்பொருள் பெறவோ வந்தார்? தந்நலமா அவர் குறிக்கோள்? பேகனின் குடும்பத்தைச் சீர்படுத்த வந்த அவர் அப் பொன் பொருளை ஏற்க மறுத்தார். அவரது பரிசில் வாழ்க்கை வயிற்றுப்பாட்டையே கருதிய தாக இருப்பின் அப்பரிசில்களைப் பெற்றுக்கொண்டு 'கிடைத்தவரை மிச்சம்' என அவர் மனம் அமைதி பெற்றிருக்கும். ஆனல் அவர் எண்ணமெல்லாம்—விழைவெல்லாம் பேகன் கண்ணகியை அடைந்து பண்டு போல இனிது வாழவேண்டும் என்பதிலே இருந்தது. அந்த ஆர்வத்துடன் அவர்,

"மயில் குளிரால் நடுங்குகிறது என எண்ணி, அதற்குப் படாம் ஈந்து, அருள் செய்த கெடாத புகழை உடையோய்! யாம் பசியால் வருந்தி வந்தேம் அல்லேம். சுற்றத்தைக் காக்கும் கடமையைக் கருதி அதற்காகப் பரிசில் பெறவும் உன்பால் வரவில்லை. ஆயினும், யாம்

யாழ் இசைத்துப் பாடி உன்னிடம் இரக்கும் பரிசில் ஒன்று உள்ளது. அதனையே எமக்குப் பரிசிலாக நல்க வேண்டுமேயன்றி, வேறு எதனை ஈந்தாலும் யாம் ஏற்றுக் கொள்ளேம். நீ அருளை விரும்பிப் போற்றும் வாழ்வு உடையாய்! அறம் செய்க என வேண்டுகிறோம். மணி யொலிக்கும் தேரேறிச் சென்று துன்பமே உருவமாக வாழும் உன் துணைவியின் துயர் களைக; இதுவே எமக்கு வேண்டும் பரிசில்!” என்று கூறுகின்றார். அவரது நட்புள்ளம் அரசனின் நல்வாழ்வில் எவ்வளவு நாட்டம் உடையதாக இருக்கிறது என்பதை அவர் கூறும் சொல் ஒவ்வொன்றும் நமக்கு உணர்த்துகின்றது.

# 6. சிந்தனைத் திறம்

சிந்திக்கும் ஆற்றல் ஒரு தனிப்பண்பு. பிற விலங்கினங்களிடமிருந்து மனிதனைப் பிரிப்பது இச் சிந்தனையே. அறிவும் நினைவும் கலந்து சிந்தனை உருவாகிறது. பழங்காலத் தமிழகப் புலவர்கள் எதனையும் சிந்தித்தவண்ணம் இருந்தனர். இதனால் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே அவர்கள் வாழ்க்கையின் அடிப்படையான தத்துவங்களை மிக எளிதாகக் கூறிச்செல்ல முடிந்தது. இன்றோ, தமிழரின் நிலை வேறாக இருக்கிறது. எதனையும் சிந்திக்காமல் புதுமை என ஏற்றுக் கொள்வதும், பழமை எனத் தள்ளுவதும் இன்று வழக்கமாகிவிட்டது. மேலும் தற்சிந்தனையால் நாட்டை நல்வழிப் படுத்தும், தலைவர்களும் அறிஞர்களும் இன்று அதிகமாக உள்ளனர். சூழ்நிலைக்கும் பழக்கத்திற்கும் இன்றைய நாகரிக மனிதன் அடிமையாகிவிட்டான். மனிதன் யந்திரமாக

மாறிவிட்டான் என்றும் கூறலாம். இங்கிலே மாறி, சிந்தனையாளர்களை அதிகமாகப் பெறும் நாடே முன்னேறும் என்பது உறுதி.

சிந்தனை என்பது, இல்லாத ஒன்றைக் கற்பித்துக் கூறுவது அன்று; இருக்கின்ற உண்மைகளைத் தெளிவு படுத்துவதேயாம். நம் தமிழ் நாட்டுப் புலவர்களின் 'பரிசில் வாழ்க்கை' அவர்களை முழுவதும் சிந்தனையாளர்களாக்கி வைத்திருந்தது. நாடெங்கும் வளம் பொங்கும் இங்கே, அரசர்களாக விளங்கியவர்கள் எல்லாம் இதனை உணர்ந்து புலவர்களைக் கவலை அற்றவர்களாக்கத் தம்மாலான உதவி செய்து வந்தனர். மேலும் அவர்கள் 'செவிகைப்பச் சொற் பொறுக்கும்' வேந்தர்களாகத் திகழ்ந்த காரணத்தால் புலவர்கள் தாம் நினைக்கும் எதனையும் அஞ்சாமல் எடுத்துக்கூறும் உரிமை பெற்றிருந்தனர். கருத்துரிமையும், பேச்சுரிமையும் மறைமுகமாகக் கூடத் தடைசெய்யப்படவில்லை, அந்நாளில். இத்தகைய உரிமைச் சூழலிலேதான் புலவர்கள் சிந்தனைச் செல்வர்களாகத் திகழமுடியும். கலைஞர்கள் நாட்டின் அழகையும் வனப்பையும் அதிகப்படுத்த முடியும்.

ஒரு சிந்தனையாளர், தாம் வாழ்ந்த நாடு தமக்கு எவ்வளவு இனிதாக இருந்தது என்பதை நமக்கு அறிவுறுத்துகிறார். பாண்டிய நாட்டில் வாழ்ந்த பிசிராந்தையார் என்ற அப்புலவர்—சிந்தனைச் செல்வர், வயதான பிறகும் நரை திரை மூப்பின்றியிருந்தார். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தபோது இப்புலவர், அங்கு சென்றார். இவரைக் கண்ட சோழநாட்டுப் புலவர்கள்,

'நுமக்கு யாண்டு பலவாகியும் நரைதிரை யின்மைக்குக் காரணம் என்ன ?' என வினவினர். அதற்குப் பதில் கூறு முகத்தான் நாட்டின் நாகரிக நிலையையே அவர் விளக்கிக் கூறினர்.

"சான்றோர்களே ! என்னைப் பல ஆண்டுகளாகக் கேள்விப்பட்டு நான் வயது முதிர்ந்தவனாக நரை திரையோடு காட்சியளிப்பேன் என்று கருதியிருந்ததாகக் கூறுகின்றீர்கள். நீங்கள் எண்ணியது போல நான் வயதானவன் என்பதற்கு ஐயமில்லை. ஆனால், வயதான பிறகும் எனக்கு தலை நரையும் முகத்திரையும் (சுருக்கங்கள்) தளர்ச்சியும் ஏற்படவில்லை. இதற்குக் காரணம் யாதென வினவுவீராயின்; சொல்லுகிறேன் கேளுங்கள் ! என் மனைவி வாழ்க்கைக்கு ஏற்ற மாட்சிமை பொருந்தியவள். மக்கள் அறிவு நிரம்பியவர்கள். என் வேலையாட்களோ, நான் கருதியதையே செய்து என்னை மகிழ்விப்பர். என் நாட்டை ஆளும் பாண்டிய மன்னன் அல்லவை செய்தறியான்; அறவழியில் பாதுகாக்கின்றான். எல்லாவற்றுக்கும் மேலாக, நன்மைகள் நிரம்பப் பெற்று தீமைகள் அகலப் பெற்று, ஐம்புல அடக்கம் பெற்ற கொள்கையினைக் கொண்ட சான்றோர்கள் பலர் என் ஊரின்கண் வாழ்கின்றனர். எனவே, எவ்வகையாலும் கவலை கொள்ளுதற்கு இடமில்லாச் சூழலிலே வாழ்ந்தவன் நான். அதனால்தான் நரைதிரை தளர்ச்சியின்றி என்னால் இவ்வளவு காலம் வாழ முடிந்தது !" என்று பிசிராந்தையர் விளக்கினர். பழம் புலவர்கள் அனைவருக்குமே பெரும்பாலும் இத்தகைய இனிய உரிமைச் சூழல் இருந்தமையே அவர்கள் சிந்தனைத் திறம் வளரத்

துணையாயிற்று. உடல் நலத்தோடு மன நலமும் அவர்கள் பெற்றிருந்தனர். இதனால் தமிழ் இலக்கியப் பூங்கா தங்கு தடையின்றிச் செழித்து வளர்ந்தது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு அப்பாலும் நிலைத்து நிற்கக் கூடிய புலமைச் செல்வத்தினை அவர்களால் சேகரித்து வைக்க முடிந்தது. உலக நாகரிக முன்னேற்றத்திற்குத் தமிழகம் தனது பங்கைப் பெரும் அளவில் உதவ முடிந்தது!

**உலகப் பொதுமை**

இத்தகைய சிந்தனைத் திறத்தால் அவர்கள் கூறிச் சென்ற தத்துவங்கள், உலக வாழ்வியல் உண்மைகள் பல. போரால் அவதியுறும் இந்நாளில் நாம் உலகப் பொதுமை பேசுகிறோம். 'சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம்' எனக் கூவி மகிழ்கிறோம். விவேகானந்த அடிகளார் அமெரிக்கா சென்றிருந்த காலை, 'சீமான்களே! சீமாட்டிகளே!!' என்று வழக்கம்போல அழையாமல், 'சகோதரிகளே! சகோதரர்களே!!' என்று அழைக்கக் கேட்டு, அந் நாட்டினர் வியப்புற்றதாகப் படிக்கிறோம். பிரஞ்சு நாட்டுப் புரட்சி, ருசிய நாட்டுப் புரட்சிகளைப் பெருமையுடன் ப்டிக்கிறோம். ஆனால், இவற்றிற் கெல்லாம் முன்னர் ஒரு தமிழ்ப் புலவர், நிகரற்ற சிந்தனை யாளர், 'கணியன் பூங்குன்றன்' என்ற பெயருடையார் எண்ணத்திலே புரட்சி விளைவித்தார்; அதை இனிய தமிழிலே எடுத்துச் சொன்னார்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

உலகத்து ஊர்களையெல்லாம் தன்னூராகவும், உலக மக்களை யெல்லாம் தன் உறவினராகவும் கருதும் உலகப்

பொதுமை வாழ்வை இனியேனும் அடையலாம் என இன்று போராடுகிறோம். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இத்துறையில் சிந்தித்து நம்மைவிட அழகாகவும் தெளிவாகவும் ' யாதும் ஊரே, யாவரும் கேளிர் ' என, நம்முன்னோர் கூறிச் சென்றுள்ளனர். கணியன் பூங்குன்றனாரின் கருத்துக்கள் தமிழகச் சிந்தனையாளர் களின் திறமைக்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாகும்.

" எல்லா ஊரும் நம்முடைய ஊரே ; எல்லா மக்களும் நம் உறவினரே !"

தீமையும் நன்மையும் பிறர்தர வருவன அல்ல ; நாமே நமக்கு உண்டாக்கிக் கொள்வனவே அவை !

அதுபோன்றே, துன்பமடைதலும் ஆறுதல் பெறு தலும் நம் மனத்தின் விளைவுகளாகும். அவை பிறரால் உண்டாக்கவும் மாற்றவும் முடியாதன.

சாக்காடு என்பது புதியதொன்றன்று ; ஆண் டாண்டாக நடந்துவரும் பழைய செயலே அது. அதைக் கண்டு நாம் அஞ்சவேண்டுவதில்லை !

எனவே, வாழ்க்கை இனிது என மகிழவும் அறியோம் ; வெறுத்து இவ்வாழ்வு துன்பமயமானது என்று கூறுதலும் அறியோம். மழை பொழிந்து வெள்ளம் பெருகிச் செல்லும் ஆற்றில் நீர் செல்லும் வழியே செல்லும் படகுபோல, நமது ஆருயிர் ஊழின் வழியே செல்லும் என்பதை அறிஞர் காட்சியினால் தெளிந்தோம். எனவே, நாம் பெரியோரை வியப்பதும், சிறியோரை இகழ்வதும் இல்லை," என்று, கணியன் பூங்குன்றனார் கூறுகின்றார்.

சுருக்கமாகத் தமிழர்களின் நாகரிக வளர்ச்சி இதுதான் என நாம் காட்டிவிடலாம். இன்றையச் சிந்தனையாளர்களும் காணாத காட்சி இது. விரிந்த மனமும் உரிமை உணர்வும் கொண்ட உள்ளத்திலே பிறந்து, உலகம் உள்ள அளவும் நிலைபெறும் சிந்தனைக் கருவூலங்கள், பண்டையப் புலவர்களின் பாடல்கள் ; என்று கூறலாம்.

# 7. அருள் உள்ளம்

தமிழ்ப் புலவர்கள் உலகைப் பற்றி எண்ணி எண்ணிப் பண்பட்ட மனம் உடையவர்களாதலால், தந்நலமற்று தாழ்ந்தார்கள். பொதுநலம் பேணுதலே குறிக்கோளாகக் கொண்டார்கள். 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகத் திகழ்ந்தார்கள். உலகத்தில் நடக்கும் சிறுமைக்கெல்லாம் காரணம் அறிவின்மை; உணர்வின்மையன்றோ ! அவ் அறிவும் உணர்வும் கலந்த நெஞ்சத்தில் புதுமை விளைந்த வண்ணம் இருந்தது; அன்பு ஊற்றெடுத்தது; அருள் சுரந்தது ! பிற சிற்றுயிர்கட்கும் தீங்கறியா வாழ்வினையே அந்நெஞ்சம் கடைப்பிடித்தது.

அருட்செல்வத்தைத் திருவள்ளுவர் மிகவும் சிறப்பித்துக் கூறியுள்ளார். பொருட்செல்வம் இழிந்தவ

ரிடத்தும் சென்று சேரும். அருட்செல்வமோ உயர்ந்தவர்களிடமே உருவாகும். பிற உயிர்களிடத்தெல்லாம் அருள் காட்டி வாழ்கின்றவன் தன் உயிர் பற்றி அஞ்ச வேண்டியதில்லை. அருள் என்பது அன்பின் வளர்ச்சி. தன் குழந்தைகளிடத்தும் மனைவியிடத்தும் சுற்றத்தாரிடத்தும் காட்டுவது அன்பு. அருள் என்பது தொடர்பில்லாதாரிடத்தும் ஏனைய உயிர்களிடத்தும் காட்டும் பரிவாகும். இந்த அருளின் செல்வராகப் புத்தர் திகழ்ந்தார் ; திருவள்ளுவர் வாழ்ந்தார்; காந்தியடிகளும் நமக்கு வழிகாட்டிச் சென்றார். பண்டைத் 'தமிழ்ப் புலவர்கள் பொது நலமே நாடும் மனப் பான்மையை வளர்த்து வாழ்ந்தவராதலின் அவர்தம் இலக்கியங்கள் அனைத்திலும் அருள் உள்ளத்தின் எதிரொலியையே கேட்கிறோம். கோவூர்கிழார் என்ற புலவர் இத்தகைய அருள் உள்ளம் படைத்த புலவர்களிலே சிறந்தவராகத் திகழ்ந்தார்.

சோழன் குளமுற்றத்துக் துஞ்சிய கிள்ளிவளன் மலையமான் திருமுடிக்காரியோடு பகைமை கொண்டான். மலையமான் பேரரசர்களைப் போன்ற திருவும் புகழும் உடையவன். கபிலராலும் மாறோக்கத்து நப்பசலையாராலும் சிறப்பித்துப் பாடப் பெற்றவன். இம்மலையமானோடு அதியமான் நெடுமான் அஞ்சியும், பகைமை கொண்டான். இறுதியில் அதியமான் கிள்ளிவளவனைத் துணை கொண்டு மலையமானை வென்று, அவனது கோவலூரை அழித்தனன். இவ்வாறு மலையமான் இறந்த பிறகும் சீற்றம் தணியாத கிள்ளிவளவன் மலையமானின் மக்களை யானைக் காலில் இட்டுக்

கொன்றுவிட எண்ணினான். இதனைக் கேள்விப்பட்டுக் கோவூர்கிழார் மனம் வருந்தினார். ஒன்றுமறியாச் சிறுவர்களைக் கொல்வதாற் பயனென்ன? தந்தை செய்த தீமைகட்கு மகனைத் தண்டிப்பார் உலகில் உண்டோ? மேலும், காண்பார் மனத்தில் இரக்க உணர்வை எளிதில் உண்டாக்கிவிடும். குழந்தைகளைக் கொல்வதென்றால், அதற்கு மிக வன்மையான கொடிய மனம் வேண்டும். கிள்ளிவளவன் அவ்வளவு கொடியவனா? அவன் மனம் மலையமான்மீது பகை கொண்டதால் அதையே நினைத்து மரத்துப் போயிருந்தது. அப்பகைமையால் காழ்ப்புண்ட நெஞ்சம் குழந்தைகளைக் கொல்லவும் துணிந்தது. எனவே, அக் கொடும் நெஞ்சம் கிள்ளிவளவனுக்கு இயல்பானதன்று. சூழ்நிலையால் உருவான செயற்கையே அது. எனவே, அதனை எளிதில் மாற்றி நல்வழிப் படுத்தி விடலாம் எனக் கோவூர் கிழார் கருதினார்; புறப்பட்டார். மலையமான் மக்கள் தமது நற்காலத்தால், தக்க சமயத்தில் காப்பாற்றப்பட்டனர்.

கோவூர்கிழார் கிள்ளிவளவனின் மனநிலை அறிந்து அதற்கேற்பப் பேசினார். முதலில் சோழர்குடிப் பெருமையினை அவனுக்கு நினைவுறுத்தினார். பிறகு மலையமான் மீது அவன்கொண்ட பகைமையைத் தணிப்பதற்காக, மலையமானின் நல்ல பண்புகளையும் வள்ளல் தன்மையையும் எடுத்துக்கூறினார். பின்னர் குழந்தைகளின் வஞ்சகம் அறியா நிலைமையினை அவன் மனங்கொள்ளும் வண்ணம் விளக்கினார். இவ்வளவும் கூறிவிட்டு, ‘இவர்களைக் கொல்லாதே’ என்று, அவர் எதிர்மறுத்துக் கூறவில்லை. “நான் கூறியன

அனைத்தையும் கேட்ட பிறகு, செய்ய விரும்பியதைச் செய்க; அல்லது செய்யாது விடுக! அது உன் விருப்பம்" எனத் திறம்படக் கூறினார். கிள்ளிவளவன் தானே சிந்தித்து ஒரு முடிவுக்கு வரட்டும் என விட்டுவிட்டார். புலவரின் திறமை இத்தகைய சொல்லாற்றலில்தான் அடங்கியிருக்கிறது.

"வளவ! நீ புறாவின் துன்பத்தையும் பிற உயிர்களின் துன்பத்தையும் போக்கிய சோழரது பரம்பரையிலே பிறந்தவன். இவர்களோ, தமது புலமையால் பாடுபட்டு வாழும் புலவர்களின் துன்பத்திற்கு அஞ்சித் தன் பொருளை அவர்களுடன் பங்கிட்டு உண்ட, மலையமான் மக்கள். யானையால் அவர்களைக் கொல்ல நீ ஏற்பாடு செய்துள்ளமையை அறியாராய், யானையைக் கண்டதும் தம்மழுகையை விட்டுவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கின்றனர். சிறிய தலையை உடைய அச்சிறுவர்கள் இக்கொலை மன்றத்தில் கூடியுள்ளவர்களை மருட்சி நிறைந்த கண்களோடு பார்த்துக்கொண்டு நிற்கின்றனர். இதற்கெல்லாம் மேலாக அவர்கள் புதிய துன்பம் ஒன்றை உணர்ந்தாராய்ப் பயந்து நிற்பதையும் பார்! நான் எனக்குப் பட்டவற்றைக் கூறினேன். இவை அனைத்தையும் நீ கேட்டுக்கொள்க. பிறகு உன் விருப்பம்போல் செய்க!' என்று கோவூர்கிழார் கூறினார்.

குழந்தைகளைக் கொல்லும் எண்ணம் எவ்வளவு கொடியது என்பதைக் கோவூர்கிழார் சுட்டிக்காட்டினார். யானையைக் கண்டு அவர்கள் வியந்து நோக்குதலையும்,

மன்றத்து மக்களைக் கண்டு அவர்கள் மருண்டு நோக்குதலையும், வரவிருக்கும் புதியதோர் துன்பத்தை உள்ளுணர்ந்து அவர்கள் பயந்து நோக்குதலையும் கோவூர் கிழார் அப்படியே சொற் சித்திரமாக்கிக் காட்டுகிறார். இக்காட்சியைக் கண்ட பிறகும் கிள்ளிவளவன் கொல்லத் துணிவானா? அவன் மனம் கரைந்தது. குழந்தைகளைக் கொல்லாது விடுத்தான். புலவரின் அருள் உள்ளம் வெற்றி கண்டது!

இவ்வாறு, பழம்புலவர்கள் தமது அருள் உள்ளத்தால் ஆற்றிய அருஞ்செயல்கள் மிகப் பல. அவர் தம் வாழ்வே அருள் வாழ்வு எனலாம். மன்னுயிர் போற்றித் தன்னுயிர் காக்கும் அறவாழ்வை வள்ளுவம் நமக்கு எடுத்துச் சொல்கிறது. சான்றோர்கள் அவ்வழியே நமக்கு வாழ்ந்து காட்டியுள்ளனர். நாமும் அந்த அருள் உள்ளம் பெறவேண்டுமென்றால், அத்தகைய புலமையும் மனப்பாங்கும் பண்பாடும் நமக்கும் வேண்டும். கல்லில் பயிர்விளையாமை போல, கல்வியுணர்வற்ற கல் நெஞ்சத்தில் அருட்பயிர் தலைகாட்டாது என்பதை, நாம் உணர்ந்து அறிவு வளர்க்கும் பணியில் ஈடுபடவேண்டும்.

# 8. பெருமித வாழ்வு

பழந்தமிழ் மன்னர்கள் பெரும் வள்ளல்களாகத் திகழ்ந்தார்கள். அவர்களின் கொடையால் நாள் தோறும் பெரும் பொருளைப் பரிசாகப் பெற்றுத் தமிழ்ப் புலவர்கள் மகிழ்ந்தார்கள். ஆயினும், தமிழ்ப் புலவர்களின் வாழ்வில் அடிக்கடி வறுமை தலைநீட்டியது. தமிழ்ப் புலவர்கள் தாம் பெற்ற பரிசில் பொருள்களைப் பாது காத்து வைப்பதில்லை. 'ஓம்பாது உண்டு கூம்பாது வீசி,' மகிழ்ந்தனர். இதனால் பெற்ற பரிசில்களை ஒரு சில நாட்களில் செலவழித்துவிட்டு, மீண்டும் வறுமைத் துன்பத்தில் உழல்வாராயினர்.

## வறுமையின் எல்லை

குமணன் என்ற வள்ளல் பேராசைகொண்ட தன் தம்பியிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டுக் காட்டில்

வாழ்ந்தான். வறுமையால் வாடிய பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் குமணனை அணுகினார். புலவர்கள், எவ்வளவு செல்வர்களாயினும் அருகிலிருந் தாராயினும் ஈயாதவரிடம் செல்லார். வறியவர்க ளாயினும் இருக்கும் கூழைப் பங்கிட்டு உண்ணும் மனம் படைத்த வள்ளல்களிடமே, அவர்கள் எங்கிருந்தாலும் 'பழுத்தமரத்தை நாடிச் செல்லும் பறவைபோலச் சுரம்பல கடந்து' செல்லுவார்கள். இங்கே, குமணன் காட்டிலிருந்தபோதும் அவனையேநாடிச் சென்றார் பெருந் தலைச் சாத்தனார். வேறு வழியின்றிச் சென்றார். கொடுப்பார் வேறு ஒருவரும் இல்லாத காரணத்தால் போலும் குமணனிடமே சென்றார். சென்று, வறுமையின் எல்லையிலே தாம் வாடுவதை எடுத்துரைத்தார். தாம் அவண் வர மனமின்றியிருந்தும் வறுமைத் துன்பம் எங்ஙனம் தம் பிடர்பிடித்துத் தள்ளியது என்பதை விளக்கினார்.

"நெடு நாட்களாகச் சமையல் செய்யப்படாத அடுப்பில் காளான் பூக்கத் தொடங்கிவிட்டது. வருத்தும் பசி மிகுந்தது. மார்பில் பால்வற்றிய காரணத்தால், என் குழந்தை பால் குடிக்கும்தோறும் தாய்முகம் நோக்கி அழத்தொடங்கியது. அதனால், நீர் நிறைந்த கண்களுடன் என் மனைவி என்னை நோக்கினாள். அவள் துன்பம் கண்டு பொறுமல் யான் உன்முகம் நோக்கி வந்தேன்," என்று குமணனிடம் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டார். இவர் வாழ்வில் வறுமையின் எல்லை யையே நாம் காண்கிறோம்.

**வறுமையில் செம்மை**

எவ்வளவு வறுமை நேர்ந்தாலும் தம் வாழ்வில் குறைவுறாத—செம்மை பிறழாத—மனம் படைத்தவர்களாகப் பழம் புலவர்கள் திகழ்ந்தனர். தமக்குப் பரிசில் தரும் காலத்தை நீட்டித்தாலும், காணுமல் தம் வேலையாள் மூலமாகப் பரிசில் பொருள்களைக் கொடுத்தனுப்பினாலும், அவற்றைத் தங்கள் மதிப்புக்குக் குறைவு தரும் செயல்களெனக் கருதிப் புறக்கணித்தனர்.

வறுமையைக் காரணம் காட்டிப் பொய்பல கூறி அவர்கள் வாழ நினைக்கவில்லை. அதனால்தான் 'பிறர்க்குத் தீதறியா வாழ்வு' எனக் கோவூர்கிழார் இப் பரிசில் வாழ்க்கையைப் போற்றிப் புகழ்ந்தார்.

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் அதியமான் நெடுமான் அஞ்சியிடம் பரிசில் பெறச் சென்றார். அவன் அவரைக் காணுமலே பரிசிலைக் கொடுத்தனுப்பினான். புலவரது பெருமித நெஞ்சம் அதனை ஏற்க மறுத்தது. "என்னை எத்தகையவனாகக் கருதினான் இவ்வரசன்? காணுமல் கொடுத்தனுப்பிய பொருளைப் பெற்றுச்செல்ல, நான் ஒரு **'வாணிகப் பரிசிலன்'** அல்லன்" என்றும், "எம் பண்பு அறிந்து தினையளவு பரிசிலாகத் தரினும் அதுவே எமக்கு இனிமை தருவதாகும்" என்றும், அவர் குறிப்பிட்டுச் சென்றார்.

இவ்வாறு கூறிச்சென்ற பெருஞ்சித்திரனார் நிலைமை யாது? கொடிய வறுமைத்துன்பத்திலே அவர் குடும்பம் உழன்றது. தாயும் மனைவியும் குழந்தைகளும் பசியால் வாடித்துடித்தனர். சமைக்க அரிசியில்லாமல் குப்பைக்

கீரையைக் கிள்ளிச் சமைத்தனர். இப்போது அதுவும் இலையற்றதாயிற்று. இத்தகைய கொடிய வறுமையில் வாடிய காலத்தும் அவர் தமது பெருமிதத்திற் குறையாமல், “யான் ஒரு வாணிகப் பரிசிலன் அல்லேன்” என்று கூறிவிட்டுத் திரும்பினர்.

மேலும், இப்பெருஞ்சித்திரனர் வெளிமான் என்ற மன்னனிடம் சென்றார். அவன் உறங்கப் போவதாகக் கூறித் தன் தம்பியைப் புலவருக்குப் பரிசில் கொடுத்தனுப்புமாறு பணித்துச் சென்றான். தம்பியோ, இரப்பவருக்குக் கொடுப்பது போல ஏதோ சிறிது பொருளைக் கொண்டுவந்து கொடுத்தனன். பெருஞ்சித்திரனர் அதைக்கொள்ளாது வெறுத்துச் சென்றார். பிறகு நாட்டாட்சியைவிட்டு நீங்காதிருந்த குமணவள்ளலிடம் சென்று, ‘குமண! நீ பெரிய ஆண்யானையைத் தந்தாலும் காலந்தாழ்த்திக் கொடுத்தால் அதனை நான் கொள்ள மாட்டேன். நீ மனம் மகிழ்ந்து கொடுப்பாயாகில் சிறிய குன்றிமணி அளவு கொடுப்பினும் இனிய பரிசிலாக ஏற்றுக் கொள்வேன்” என்று குறிப்பிட்டார். குமணனுடைய வள்ளல் தன்மையை அறிந்ததும், தமது மனைவியின் இன்னலை எடுத்துரைத்து “அவள் மருளுமாறு நீ பரிசில் தரவேண்டும். பனைமரம் போலும் துதிக்கை, முத்துத் தோன்றுமாறு முதிர்ந்த தந்தங்கள், ஒளிவீசும் நெற்றிப்பட்டம், இவற்றையுடைய மலை போன்ற தோற்றமுடைய ஆண் யானையை நீ எனக்குப் பரிசிலாக நல்கவேண்டும். அதன் இருமருங்கும் மணி ஒலி இரட்ட, நான் செம்மாந்து ஏறிச் செல்லுதல் வேண்டும்!” எனத் தம் உள்ளத்தின் எண்ணத்தை

ஒளியாமல் உரைத்தார். இதனைக் கேட்ட குமண வள்ளலும் மனமகிழ்ந்து களிறு ஒன்றினைப் பரிசிலாகத் தந்தான். அதனைத் தம் மனைவி மகிழுமாறு ஏறிச் சென்று காட்டியதோடமையாமல், முன்பு பரிசில் தர விழையாமல் உறங்குதற்குச் சென்ற வெளிமானிடம் சென்றார். அவனுடைய காவல் மரத்திலே இந்த யானையைக் கட்டிவிட்டுப் பிறகு அவனைப் பார்த்து, "தலைவனே! நீ ஒருவனே இரவலர்க்குப் புரவலனாகப் பிறக்கவில்லை; பல புரவலர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். இரவலர் இருப்பதனையும் அவர்க்கு மனமகிழ்ந்து ஈவோரும் இருப்பதனையும் இனியாவது நீ தெரிந்துகொள். உன் ஊரிலே உள்ள காவல்மரம் வருந்துமாறு, யான் கொண்டுவந்து கட்டியுள்ள பெரிய யானை, யானே பரிசிலாகப் பெற்றது. அந்த யானையைப் பார்த்தாவது உண்மை அறிந்துகொள்வாயாக. அதனை உனக்குப் பரிசாகத் தந்துவிட்டு யான் செல்லுகிறேன்" என்று, கூறிச்சென்றார் பெருஞ்சித்திரனார். இவ்வாறு பெருமிதத்தோடு வாழ்ந்தனர் அக்காலப் புலவர்கள்.

**புலவர்தம் வண்மை**

வள்ளல்களிடம் பரிசில் பெற்று வாழ்ந்த புலவர்கள் தாங்களும் வண்மையாளர்களாகவே திகழ்ந்தனர். பிறர்க்குக் கொடுப்பதே வாழ்வாகக் கொண்டவர் வள்ளல்கள். அவர்களைப் பாடிப்பெற்ற பரிசில் பொருளையும் புலவர்கள் வரையாது வழங்கினர். பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தினர். மேலே, குமணனிடம் பெருஞ்சித்திரனார் மிகவும் கொடிய வறுமையுடன் சென்று பரிசில் பெற்ற விரம் கண்டோம்.

அவ்வாறு பெற்றுவந்த பரிசில்களை அவர் யாதுசெய்தார்? தம் மனைவியிடம் கொண்டுபோய்க் கொடுத்தார், 'இவற்றைப் பத்திரமாக, யாருக்கும் கொடாமல் மறைத்துவை. வேண்டும்போது நாம் எடுத்துப் பயன் படுத்திக் கொள்வோம்' எனத் தன்னலத்திற்காக அவர் கொடுக்கவில்லை. பரிசில் பொருள்களைக் கண்டு தன்னை மறந்து நின்ற மனைவியாரைப் பார்த்து அவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார் :

"பழங்கள் கனிந்து தொங்குகின்ற முதிர மலைத் தலைவனாகிய குமணன் நல்கியவை இவை. இச்செல்வங் களைப் பேணிப் பாதுகாத்து வைக்கவேண்டிய இன்றிய மையாமை இல்லை. நாளை மீண்டும் சென்று கேட்டாலும் குமணன் கொடுக்கக்கூடியவனே. எனவே, உன்னை விரும்புவோர்க்குக் கொடு! நீ விரும்புகின்றவர்கட்கும் கொடு. பலவாகிய மாட்சிமைப் பட்ட நின் சுற்றத்தார் முதலியவர்கட்கும் கொடு. நம் பசிதீரச் சமயங்களில் கொடுத்துதவிய அனைவருக்கும் கொடு. இன்னார்க்கு என்று வரையறை செய்ய வேண்டியதில்லை ; என்னைக் கேட்டுத்தான் கொடுக்க வேண்டுமென்பதுமில்லை ; பொருளைச்சேர்த்து வாழ்வோம் என்று திட்டமிட வேண்டியதுமில்லை ; நானும் கொடுப்பேன் ; நீயும் எல்லோர்க்கும் கொடுப்பாயாக !"

இங்ஙனம் தங்கட்குக் கிடைக்கும் பரிசிலை ஒரே நாளில் வாரியிறைக்கும் பண்பையே புலவரிடம் காண்கிறோம். தாய்ப்பாலின்றிக் குழந்தை அழும் காட்சி, அடுப்பில் காளான் பூத்த காட்சி, குப்பைக் கீரையைச்

சமைத்துண்டு உண்டு, அக்கீரையும் இலையற்றுத் தோன்றும் காட்சி ஆக இவை ஒருபுறம். தம் பாடலை மதித்துப் பெருவள்ளல்கள் களிறும் பொன்னும் பொருளும் தர ஏற்று வந்து, உடனே அவற்றைப் பலர்க்கும் பங்கிட்டுத் தீர்க்கும் காட்சி மற்ெறாரு புறம் ! பழந்தமிழ்ப் புலவர்களின் பரிசில் வாழ்க்கை விந்தை யானது !

பெருமித வாழ்வே குறிக்கோளாகக் கொண்டு, வயிற்றுப் பிழைப்பை இரண்டாம்படியாக வைத்து அவர்கள் வாழ்ந்தனர். இதனால் அழியாத இலக்கியங் களைப் படைத்து இன்றும் நம்முடன் அவர்கள் வாழ் கின்றனர். எனவே, பழந்தமிழ்ப் புலவர், தம் வாழ்வின் அடிப்படையாக இப்பெருமிதத்தையும், குறிக் கோளாக நாட்டு நலத்தையும், அதற்குரிய வழியும் கருவியுமாகத் தமது திறமையையும் பரிசிலையும் கருதி வாழ்ந்தனர் எனலாம்.

# 9. அரசர்கள் ஆதரவு

**ப**ழங்காலப் புலவர்களின் வாழ்வை யாண்டும் தனித்துக் காண்டல் இயலாது. குடும்ப வாழ்வு அல்லது வரலாறு என்றால் அதற்கு இருவர் வேண்டும். ஆண்—கணவனாகவும், பெண்—மனைவியாகவும் கொண்ட முழு வாழ்வே குடும்ப வாழ்வாகும். வாழ்க்கையின் இரு கூறுகளாகத் திகழ்கின்றனர் கணவனும் மனைவியும். அதுபோலவே இறை வணக்கத்திலும் இரு முனைகளைக் காண்கிறோம். கடவுளும் பக்தனும் அங்கே காட்சியளிக்கிறார்கள். இருவரும் பிரிக்கமுடியாதபடி ஒருவர் அன்பில் ஒருவர் பிணைந்து திகழ்கின்றார்கள். அது போலப் பரிசில் வாழ்க்கையிலும் புரவலரும் புலவரும் பிரிக்க இயலாதபடி இணைந்து காணப் பெறுகின்றனர். பரிசில் பெறும் புலவர் ஒரு கூறு ; அவருக்குப் பரிசில் தரும் வள்ளல் பிறிதொருகூறு. இவர் இன்றி வள்ளலும் இல்லை ; வள்ளலின்றி இவருக்கு வாழ்வும் இல்லை.

அக்கால அரசர்கள் இலக்கியத் தந்தைகளாகத் திகழ்ந்தார்கள். இலக்கியங்களைப் படைத்து வளர்த்துத் தந்த புலவர்களை இலக்கியத் தாயர் எனலாம். இவ் இலக்கியக் குடும்பம் கவலையற்று வாழப் பொருள்தேடித் தந்து, புற வாழ்வைச் செம்மைப் படுத்திய அரசர்களை ஏன் இலக்கியத் தந்தையர் என்று கூறக்கூடாது? ஔவையார் அதியமானைத் தன் தந்தைபோல் வைத்துப் போற்றிய செய்தி இங்கு நினைவு கூரத்தக்கது. ஔவையோ, பாட்டி வயதானவர். ஆனால், வயதான கிழப்பருவத்தினரைக் குழந்தைகளுடன் ஒப்பிடுகிறோம் இல்லையா. அதுபோல புலவர் ஔவையாரும், " அதியமான் அஞ்சியே, நான் பாடுகின்ற பாக்கள், என் வாயிற் பிறக்கும் சொற்கள் குழந்தையின் சொற்கள் போன்றவை. அவை காலத்தோடும் பொருந்துவதில்லை, பொருள் அறியவும் முடிவதில்லை. எனினும், ஒரு குழந்தையின் மழலைமொழி கேட்டுத் தந்தை அருள் செய்வது போல, நீ எனது சொற்களைக் கேட்டு அருள் செய்கின்ற காரணத்தால், அவை இனிமையுடையனவாகின்றன!" என்று பாடுகிறார். எனவே, இலக்கியத்தை வளர்க்கப் பழங்கால மன்னர் செய்த உதவிகள் சிறப்புடையன வாகும்.

பழங்காலத்து அரசர்கள் புலவர்களின் தகுதியறிந்து பரிசு வழங்கினார்கள். புலவர்களைப்போல அரசர்களுக்கும் அறிவும் இலக்கியப் பயிற்சியும் இருந்ததால்-தான் இது கைகூடியது. பொன்னை மாற்றுப் பார்த்து, நயம் பயம் அறிய மாட்டாதவன் பொன் வாணிகம் செய்யப்புறப்பட்டால் கடைக் கணக்கும், கைப்பொருளும் என்னாகும்? எனவே புலவர்களின் தகுதியறிந்து பரிசில்

கொடுக்கும் ஆற்றல் அக்காலப் புலவர்கட்கு இருந்தது. ஒவ்வொரு அரசனும் விற்பயிற்சி வாட்பயிற்சியோடு, கல்விப்பயிற்சி, கலைப்பயிற்சி, சொற்பயிற்சியும் பெற்றிருந்தான். எனவே, இப்புலவர் இவ்வளவு தகுதியுடையார் என, அளந்தறியவும், அவர்களின் தகுதிக்குக் குறை நேராமல் பரிசில் நல்கவும், அவ்வாறு நல்கி இலக்கிய வளர்ச்சிக்கு உதவவும் அவர்களால் முடிந்தது. அவர்களிடையே, 'வெளிமான்' போன்ற இலக்கியச் சுவையுணராத மன்னர் ஒரு சிலரும் இருக்கத்தான் செய்தனர்!

அக்கால அரசர்களிலே பலர் நல்ல பாவன்மை படைத்துப் புலவர்களைப் போலப் பாடியுள்ளனர். பாண்டியன் அறிவுடை நம்பி, பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பூதப் பாண்டியன், சோழன் நலங்கிள்ளி போன்ற அரசர்களும், பூதப் பாண்டியன் தேவி, பாரி மகளிர் போன்ற அரச குலப் பெண்களும் பாடிய பாடல்கள் புறநானூறு அனைய சங்க நூல்களில் காண்கிறோம். செல்வத்திருவுடையார் கல்வியும் பெற்று வாழும் அருமை அறிந்து போற்றுதற்குரியதாகும். இக்காலத்தில் செல்வம் சேர்ந்தவுடன் கல்வியைப் புறக்கணிப்பதையே காண்கிறோம். கற்றறிந்த சான்றோர்களையும் மதிக்க மறுக்கின்றனர். 'எல்லாம் பணத்தால் ஆகும்' என்ற எண்ணமே தலையெடுக்கின்றது. செல்வம் என்பது ஒரு கருவி. அதனால் விளைத்துப் பயனடைதற்குரியன கல்வி, கலை, இன்பம் அனையன என்ற எண்ணம் ஏற்பட்டாலன்றோ, நாடு நலமுறும். வீணே, பணமே பெரிதெனஎண்ணி அலைவதால், இக்கால உலகம் அடைந்து வரும்

இன்னல்கள் பல. செல்வம் உடையார் அனைவரும் கல்வியும் உடையவராகத் திகழ்ந்தால், இரக்கவுணர்வு பெருகும் ; நாடு நன்னெறி பிறழாது முன்னேற வாய்ப்புண்டாகும்.

பூதப் பாண்டியன் என்ற மன்னன் வஞ்சினம் கூற நேர்ந்தபோது, " அந்துவஞ் சாத்தன், ஆதன் அழிசி அனைய கண்போன்ற நண்பர்களுடன், இனிமையாகப் பேசி மகிழும் வாழ்க்கையை யான் இழப்பேனாக !" என்று கூறினான். இதிலிருந்து அவனது நட்பின் திறத்தையும், கல்வியாளர் கூடி மகிழும் இன்பத்திற்கு அவன் வைத்திருந்த மதிப்பையும் நாம் உணர்கிறோம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், வஞ்சினம் கூறுங்கால்,

"எனது நிழலிலே வாழும் குடிமக்கள், செல்லுமிடம் அறியாமல், எம் அரசன் கொடியன் என்றுகூறி அழுது அரற்றும் கொடுங்கோலாட்சி செய்தவனாக, நான் ஆகுக; மிகவுயர்ந்த கேள்வி யறிவினையுடைய மாங்குடி மருதனாரைத் தலைவராகக்கொண்ட, உலகத்தோடு நிலைபெற்ற, பலரும் புகழும் சிறப்பினைக்கொண்ட புலவர்கள் என் நில எல்லையைப் பாடாது நீங்குக ! இரப்பவர்க்கு ஈயாத வறுமையை நான் அடைக !" என்று குறிப்பிடுகிறான். இதில், புலவர்களால் தான் பாடப்பெறுதலையும், தன் நாடு பாடப்பெறுதலையும் அவன் எவ்வளவு மதித்திருந்தனன் என்பது புலனாகின்றது.

அரசர்கள் புலவர்கட்குத் தந்தையாக விளங்கினார்கள். சில சமயங்களில் புலவர்களின் குழந்தையாக

மாறினார்கள். தமது ஆட்சிச் செல்வாக்கால் புலவர்களை அடக்காமல் முழு உரிமை கொடுத்தார்கள். தம்மையே கண்டிக்கவும், தமது பிழைகளையே எடுத்துக் கூறவும், தம்மைப் பழித்தும் கடிந்தும் கூறவும் அவர்கள் இடம் கொடுத்தார்கள். புலவர்கட்கு இவ்வளவு உரிமை கொடுத்ததால் இலக்கியம் வாழ்ந்தது. இலக்கியத்தால் அவ்வரசர்கள் இன்றளவும் வாழ்கின்றனர்.

மேனாட்டில், அண்மையில் உலகப் பேரறிஞராகத் திகழ்ந்து உயிர் நீத்தவர் பெர்னாட்ஷா. அவர் மிக உரிமையோடு, இங்கிலாந்தில் வாழ்ந்தார். அரசினர் தவறுகளையும் அஞ்சாது எடுத்துக்கூறி, மக்கள் போற்ற வாழ்ந்தார். அவரது வாழ்வும், பழம் புலவர்களின் வாழ்வும் ஒப்பிட்டுக் கருதத்தக்கது. உரிமை பெறுவதிலும் சரி, கடமை ஆற்றுதலிலும் சரி பெர்னாட்ஷா நம் பழம் புலவர்களையே ஒப்புமையாகப் பெற்றுத் திகழ்ந்தார். ஆனால், ஒரே ஒரு வேறுபாடு. பழம் புலவர்களை அரசர்களே பரிசில் நல்கி ஆதரித்தார்கள். இன்று அரசர்களின் இடத்தில் மக்கள் இருக்கிறார்கள் ; வரிசை அறிந்து பரிசில் நல்குகிறார்கள். பெர்னாட்ஷாவின் கையெழுத்து ஒன்றிற்கு, ஐந்து ஷில்லிங்கு தர மக்கள் விரும்பினர் எனின், அது பரிசிற் பொருள் தகுதி யறிந்து தரப்படுகிறது என்பதைத்தானே காட்டுகிறது. நம் நாட்டிலும், இன்று, மக்கள்—அரசர்கள் நிலையில் நின்று புலவர்களை ஆதரிக்கும் நிலைக்கு வருகின்றனர். நாட்டில் கல்வி வளர்ச்சி எவ்வளவு பரவுகிறதோ அவ்வளவிற்கு நன்மையாகும்.

எனவே, அரசர்கள் பரிசில் வாழ்க்கையின் முக்கிய கடமையை ஆற்றியவர்கள் என்பதையும், இலக்கிய வளர்ச்சி அவர்களின் தூண்டுதலால் ஏற்பட்டது என்பதையும், எனவே, இலக்கியத்தின் தந்தையார் என்று அவ்வரசர்களை அழைக்கலாமென்றும் கண்டோம். இன்று அரசர்களின் நிலையில் மக்கள் இருந்து, இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிகின்றனர் என்பதையும் நாம் அறிந்தோம். நாட்டு நலங்கருதுவோர் இவைகளை மனங்கொண்டு பணியாற்ற வேண்டும்.

# 10. முடிவுரை

பரிசில் வாழ்க்கையின் சிறப்பைப் பலவாறாக ஆராய்ந்தோம். முதலில் அக்காலப் புலவர்களின் பண்புகள் நம் உள்ளங் கவர்கின்றன. அழுக்காறாமை, வெகுளாமை, பொய் கூறாமை போன்ற குணங்களுடன் வினை செயல்வகை, சொல்வன்மை, கலைத்திறம் முதலிய நற்பண்புகளும் அவர்களிடம் விளங்கின.

பரிசில் வாழ்க்கை என்பது, அரசர்களுக்கும் புலவர்களுக்கும் இருந்த தொடர்பைக் குறிப்பதாகும். அத் தொடர்பால் இரு நன்மைகள் விளைந்தன.

(1) அரசன் நல்வழியில் நாட்டை ஆட்சி செய்யப் புலவர்கள் தூண்டுகோலாக இருந்தனர்.

(2) இலக்கியம் வளரப் புலவர்கள் பெரும் பணி ஆற்றினர்.

ஒரு புலவர் ஒரு சமயம் அமைச்சர்போல அரசனுக்கு அறிவுரை கூறக் காண்கிறோம். மறு சமயம் அவரே தூதுவராகி, பகை மன்னரிடம் சென்று சந்து செய்விக்கக் காண்கிறோம். நண்பர் போல உரையாடவும், அறநெறி தவறிய வழி இடித்துரைத்துத் திருத்தவும், பிரிவுற்றவழிக் கண்ணீர் பெருக்கிக் கையறு நிலை பாடவும் காண்கிறோம். அதே புலவர் குழந்தைபோல அரசனிடம் வஞ்சகமின்றிப் பழகுவதையும் தமக்கு இன்ன பொருள் பரிசு தரவேண்டும் எனக்கேட்பதையும், தருவதற்குச் சுணங்கினாலும், குறைத்துக் கொடுத்துத் தகுதியை மறந்து பேசினாலும் சினந்து, பரிசு வேண்டாம் என மறுத்துச் செல்வதையும் காண்கிறோம்.

முற்றும் உரிமை தவழும் சூழலிலே அவர்கள் வாழ்ந்தனர்; உள்ளம் அருளால் கனிய, உலகின் நலமே தந்நலமாகக்கருதி வாழ்ந்தனர்; சிந்தனையின் ஆழத்தைக் கண்டு, காலத்தால் அழியாத கருவூலங்களைப்படைத்துச் சென்றனர். பெருமித வாழ்விலே மகிழ்ந்து, வள்ளல்கள் போலத் தாம் பெற்ற பரிசில் பொருள்களையும் வாரி வழங்கினர்.

நமது தமிழகத்தின் வரலாறு இன்று நமக்குக் கிடைப்பதற்கும், நமது நாகரிகம் இடையறவு படாமல் நிலைத்திருப்பதற்கும் இப்புலவர்களின் பரிசில் வாழ்க்கையே காரணம். ‘உண்மையான செல்வம் கல்விச் செல்வமே’ என்னும் சொற்கள், இவர்களால் மெய்யாகி விட்டன. மூவேந்தர்கள் எவ்வளவோ செல்வத்திலே திளைத்தனர். தமிழகம் உலகம் முழுதும் வாணிகம்

செய்து செல்வத் திருநாடாக விளங்கியது. ஆனால், இன்றும் நிலைத்தது எது? இனியும் நிலைப்பது எது? கல்வி—கல்விச் செல்வமே யன்றோ!

**கேடில் விழுச்செல்வம் கல்வி ; ஒருவற்கு**
**மாடல்ல மற்றையவை**

என்று கூறும் திருக்குறள் கருத்து ‘பரிசில் வாழ்க்கை’ யால் நிலைத்து விட்டது. இனியும் தமிழகம் வாழ வேண்டுமேல், புலவர்கள் பண்பு, பழம் புலவர்கள் கொண்டிருந்த பண்பு போலத் திருந்துதல் வேண்டும். அப்புலவர்கள் கவலையற்றவர்களாய் வாழ, அரசும் மக்களும் உதவ வேண்டும். உண்மையான, திறமையான புலமைச் செல்வம் இங்கே தழைக்க, அதுவே வழியாகும்.

UNIVERSITY EXTENSION
2 SEP 1961